## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


03.03.2019 பொதுக்காலம் எட்டாம் ஞாயிறு - திருப்பலி 02

04.03.2019 புனித கசிமீர் - திருப்பலி 03

05.03.2019 சிலுவையின் புனித யோசேப்பு - திருப்பலி 04

06.03.2019 திருநீற்றுப் புதன் - திருப்பலி 05

07.03.2019 புனித பெர்ப்பெத்துவா மற்றும் பெலிசித்தா - திருப்பலி 06

08.03.2019 இறைவனின் புனித யோவான் - திருப்பலி 08

09.03.2019 உரோமை நகர் புனித பிரான்சிஸ் - திருப்பலி 09

10.03.2019 தவக்காலம் முதல் ஞாயிறு - திருப்பலி 10

17.03.2019 தவக்காலம் இரண்டாம் ஞாயிறு - திருப்பலி 11

18.03.2019 எருசலேம் நகர் புனித சிரில் - திருப்பலி 13

19.03.2019 கன்னி மரியாவின் கணவர்
புனித யோசேப்பு பெருவிழா - திருப்பலி 14

24.03.2019 தவக்காலம் மூன்றாம் ஞாயிறு - திருப்பலி 15

25.03.2019 இயேசுவின் பிறப்பு முன்னறிவிப்பு பெருவிழா - திருப்பலி 17

31.03.2019 தவக்காலம் நான்காம் ஞாயிறு - திருப்பலி 18


## பகுதி 2: விசுவாசத்தில் வளர...


1. புனிதத்தில் வழிநடத்தும் தவமும், ஒறுத்தலும் 20
2. கன்னி மரியாவின் கணவர் புனித யோசேப்பு
   நம் குடும்ப வாழ்வுக்கு வழிக்காட்டி 22
3. புனித பெர்ப்பெத்துவா மற்றும் பெலிசித்தா வாழ்வு தரும் பாடம் 25
4. திருச்சபைச் செய்திகள் 27

## பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

## 03.03.2019 பொதுக்காலம் எட்டாம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

I. சீரா. 27: 4-7 II. 1கொரி. 15: 54-58 லூக். 6: 39-45

இயேசு கிறிஸ்துவில் இனிய சகோதர சகோதரிகளே, இன்றைய வாசகங்கள் அனைத்தும் ஆய்வு செய்யாமல், மற்றவரைத் தீர்ப்பிடும் மனநிலையைக் களைந்து விட்டு பிறரைப், புரிந்துக்கொண்டு, திருந்தி வாழும் மனநிலைக்கு நம்மை அழைக்கின்றது. இன்றைய முதல் வாசகம் உள்ளத்திலிருந்து வரும் சொல் ஒருவரைப் புரிந்துக்கொள்ள ஏதுவாயிருக்கிறது என்றும், அதற்குமுன் அவரைப் புகழாதே என்றும் கூறுகிறது. இரண்டாம் வாசகத்தில், சாவை முற்றிலும் ஒழித்து வெற்றியை நிலைநாட்டியவர் ஆண்டவர் என்றும், அவருக்காக பணிச் செய்ய இன்னும் அதிகமான மனஉறுதி வேண்டும் என்றும் புனித பவுல் கூறுகிறார்.

நற்செய்தியில் நல்ல பார்வை உள்ளவர்களே, பார்வையற்ற ஒருவருக்கு வழிகாட்ட முடியும், தன் கண்ணிலிருக்கும் குறையை நீக்கிவிட்டு பிறர் கண்ணைக் குறை கூறுங்கள் என்று ஆண்டவர் கூறுவதாக படிக்கின்றோம். கெட்ட கனிதரும் நல்ல மரமுமில்லை, நல்ல கனிதரும் கெட்ட மரமுமில்லை. ஒவ்வொரு மரமும் அதனதன் கனியாலேயே அறியப்படும். அதுபோல் உள்ளத்தின் நிறைவையே வாய்பேசும், என்று நமதாண்டவர் இயேசு கூறுகிறார். தன்னை நல்லவன் என்று எண்ணிக்கொள்வது அறியாமையின் உச்சக்கட்டம். ஆணவத்தின் வெளிப்பாடு. நம் பாவங்களைப் பிறர்மீது சுமத்தாமல் மனம் வருந்தி தூய ஆவியாரின் துணைக்கொண்டு மன்னிப்புப் பெற்று நம் குறைகளைக் களைந்து திருஅவையோடு ஒன்றித்து இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் ஆகியோர் மக்களின் விசுவாச வாழ்வுக்காக எடுக்கும் முயற்சிகள் உமது அருளால் மக்களின் உள்ளங்களில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்த அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. உறுதியூட்டும் இறைவா, எமது நாட்டுத் தலைவர்கள் தங்களுக்கு எதிர்ப்பாக உள்ளவர்களின் குறைகளையே சுட்டிக்காட்டாமல், தங்களிடம் உள்ள குறைகளைக் களைந்து மக்களுக்கு நல்லாட்சி தந்திட அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. குடும்ப உறவுகளைக் காக்கும் திருக்குடும்ப நாயகனே, திருஅவையின் அடித்தளமான குடும்பங்களில் நிலவும், கருத்து வேறுபாடுகளையும், வேற்றுமைகளையும் களைந்து குறைகளோடு அவர்களை ஏற்றுக்கொண்டு நேசத்தோடும், பாசத்தோடும் வாழ அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

4. நீதியின் இறையரசே, சிறைச்சாலைகளில் அவதியுறும் மக்கள் தாம் செய்த குற்றங்களுக்கு மனம் வருந்தி திருந்தி வாழ அருள்புரியும். மேலும் அவர்களின் குடும்பத்தினர் அனைவரும் அவர்களின் குற்றங்களை மறந்து ஏற்றுக்கொண்டு புதுவாழ்வு தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 04.03.2019 புனித கசிமீர் திருப்பலி

**முன்னுரை**

திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

இறையேசுவில் அன்புமிக்க சகோதரிகளே, சகோதரர்களே, இன்று திருஅவையானது புனித கசிமீர் என்பவரின் திருவிழாவைக் கொண்டாடி மகிழ்கிறது. போலந்து நாட்டு இளவரசரான இவர் 1458, அக்டோபர் மூன்றாம் நாள் க்ராக்கோ நகரில் பிறந்தார். இவரது பெற்றோருக்கு 13 பிள்ளைகள். இவர் மூன்றாவது பிள்ளை. அரச அரண்மனையில் வளர்ந்தபோதிலும் சுகபோகங்களை வெறுத்து ஒறுத்தல் முயற்சிகளை மேற்கொண்டார். திருப்பலி, திவ்விய நற்கருணை, இயேசுவின் பாடுகள், அன்னை மரியாள்மீது அளவற்ற பக்தி வைத்திருந்தார். ஏழைகளுக்கு அதிகம் உதவி செய்தார். தூய கற்பை இழப்பதைவிட சாக விரும்புகிறேன் என்பார்.

புனித கசிமீர் 13 வயதில் வரங்கேரியின் அரசராக நியமிக்கப்பட்டார். சிறப்பாக நீதியோடும், உண்மையோடும் ஆட்சி செய்த மகனுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பிய தந்தை ஜெர்மனி பேரரசர் மூன்றாம் பிரடரிக்கின் மகளைப் பேசி முடித்தார். தான் திருமணம் செய்யாமல் தனியாகவே இருக்க விரும்புகிறேன் என்று கூறி திருமணத்திற்கு மறுப்புத் தெரிவித்தார். இரவு நேரங்களில் பூட்டப்பட்டிருக்கும் ஆலயத்திற்கு முன் குளிரையும் பொருட்படுத்தாது பலமணி நேரங்கள் மண்டியிட்டு செபிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தார். அன்னை கன்னிமரியாள்மீது அளவற்ற பக்தியும் நம்பிக்கையும் கொண்டிருந்தார். இவர் இளைஞர்களின் பாதுகாவலராகவும், நீதிநெறி பிறழாத ஆட்சிக்கும், கற்பு நெறி தவறாத வாழ்வுக்கும் பெயர் பெற்ற கசிமீர் 1484 மார்ச் 4ம் நாள் காசநோயால் இறந்தார். நாமும் இவரின் வழியைப்பின்பற்றி தந்தைக்கு ஏற்ற மக்களாக வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் மற்றும் கிறிஸ்துவின் நம்பிக்கையாளர்கள் அவைரும் தங்களது அணுகுமுறையில் உமது திருமகன் இயேசுவின் இரக்க திருமுகத்தை வெளிப்படுத்தி, வெற்றியுடன் தங்களது பணிகளைச் செய்ய உமது அருள்வரங்களை அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.
2. நல்வாழ்வின் நாயகனே இறைவா, நீதிநெறி பிறழாத ஆட்சியை நடத்தி மக்களின் துயர் போக்கிய புனித கசிமீர் வழியில் எம் நாட்டுத்தலைவர்கள், ஆட்சியாளர்கள் நீதிநெறி தவறாமல் மக்களின் குறைகளை நீக்கி நேர்மையோடும் தாராள மனதோடும் செயல்பட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. வழிநடத்தும் வானகத் தந்தையே இறைவா, எம் நாட்டில் வழி தவறிச்செல்லும் ஒவ்வொரு இளையோரையும் நீரே வழிநடத்தவும், புனித கசிமீர் தனது இளமைக் காலத்தில் பக்தியோடும், உதவி செய்யும் மனதுடனும் வாழ்ந்ததுபோல இவர்களும் வாழ்ந்திடவும் அருள்புரிமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 05.03.2019 சிலுவையின் புனித யோசேப்பு திருப்பலி

**முன்னுரை**

திருமதி. டிலைலா சேவியர்

சிலுவையின் புனித யோசேப்பு இளம் வயதிலிருந்தே கிறிஸ்தவ நன்னெறிகளை சிறந்த விதமாக அனுசரித்து வந்தார். பின் பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்தார். இவர் மிகவும் தாழ்ச்சியுள்ளவர். இவர் குருப்பட்டம் பெற்று பெரியவர்களுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்தார். கடவுளின் அருளால் இவர் புதுமையாக அநேக காரியங்களைச் செய்து வந்தார். தன் சபையின் மடம் ஒன்றை இத்தாலியில் நிறுவ முயன்றபோது பல துன்பங்களை அனுபவித்தார். விரோதிகள் இவரின் நற்பெயரைக் கெடுக்க முயன்று அவரைப்பற்றி அவதூறாகப் பேசினர். இவரைப்பற்றிய அபாண்டங்களைப் பல இடங்களில் பரப்பினர். தாழ்ச்சியும் துறவற கட்டுப்பாடும் இவரிடம் சிறந்து விளங்கின. கடவுள் இவருக்குப் பல வரங்களைக் கொடுத்திருந்தார். நடக்கவிருக்கும் காரியங்களை முன்கூட்டியே அறிவிக்கும் வல்லமையைப் பெற்றிருந்தார். இவர் செபத் தியானத்தையும், தவத்தையும் நேசித்ததோடு, பிறரையும் பின்பற்றச் செய்தார். இப்புனிதரின் சிறந்த குணங்களான கீழ்ப்படிதல், பொறுமை, தியானச் சிந்தனை, தவமுயற்சிகள் இவற்றை நாமும் கடைப்பிடிக்க வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பே உருவான இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் அனைத்து துறவறத்தாரும் இறையன்பிலும்,

பிறரன்பிலும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட திருஅவையை வழிநடத்தும் வரம்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. எல்லாம் வல்ல அன்பு இறைவா, இன்றைய இளைஞர்கள் தங்களுடைய திறமைகள், ஆற்றல்களை அழிவுச் செயல்களுக்குச் செயல்படுத்தாமல், ஆக்கச் செயல்களுக்கும், பிறரின் நலன்களுக்குச் செயல்படுத்தும் நல்ல உள்ளம் கொண்ட பிள்ளைகளாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. சமாதானத்தின் ஊற்றே இறைவா, பங்கு மக்கள் அனைவரும் இறைவனுக்கு ஏற்புடைய மக்களாய் விளங்கவும் உமது அருட்கொடைகளைப் பெற்றுக்கொள்ளவும் சண்டை, சச்சரவுகள், நோய் நொடி, கடன் தொல்லைகள், குடும்பப் பிரச்சனைகள் நீங்கவும், அன்றாட குடும்பச் செபம் செய்யும் நல் உள்ளங்களாக வாழவும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 06.03.2019 திருநீற்று புதன் திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

I. யோவே 2: 12-18 II. 2கொரி. 5: 20-6:2 மத்.6: 1-6, 16-18

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, நம் கத்தோலிக்க கிறிஸ்தவ ஆன்மீகத்தின் சாராம்சத்தை இன்றைய நற்செய்தி வாசகம் தெளிவாக எடுத்துரைக்கிறது. ஒவ்வொரு மதத்திற்கும் ஒரு ஆன்மீகம் இருக்கிறது. கிறிஸ்துவம் என்பது பக்தியோடு மட்டும் நின்றுவிடுவதன்று. மாறாக, செயல்பாடுகளுக்கும் முக்கியத்துவத்தைக் கொடுப்பதை நாம் பார்க்கலாம். இன்றைக்கு வேண்டியது வழிபாடா? செயல்பாடா? என்று இறை மக்களிடையிலும் அருட்பணியாளர்கள் மத்தியிலும் மிகப் பெரிய விவாதங்கள் நடந்துக் கொண்டிருக்கின்றன. ஒரு சிலர் வழிபாட்டில் நிறைவு காண்பவர்களாகவும், வேறு சிலர் செயல்பாடே சரியான பாதை எனக்கூறி அதில் மகிழ்ச்சிக் காண்பவர்களாகவும் இருக்கிறார்கள். இவ்விரண்டையும் ஒருபோதும் பிரிக்க முடியாது என்பதை இயேசுவின் போதனையும் அவரது வாழ்வும் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

செபம், தவம் மற்றும் தர்மம் என்கிற இந்த மூன்றையும் இணைத்து, புரட்சிகரமான ஆன்மீகத்தைத் தருவதுதான் கிறிஸ்தவ ஆன்மீகம் என்று மறைவல்லுநர்கள் சொல்கிறார்கள். செபம் நம்மை செயல்பாட்டிற்கு அழைக்கும் உந்து சக்தியாக அமையும் வகையில் வழிநடத்த வேண்டும். அதுபோல செயல்பாடு சிறப்பாக அமைய நமது செப வாழ்வு சிறப்பாக துணைபுரிய வேண்டும். ஒன்று மற்றொன்றிற்கு இணையானதாக, உறுதுணையாக இருக்க வேண்டும். இன்று துவங்குகிற தவக்காலம் நமக்கு விடுக்கக்கூடிய அழைப்பு, "நம் வாழ்வை மாற்ற வேணடும்" என்பதே. இந்த நாட்களிலே இதைச் சிந்திப்போம். நாம் செயல்படுத்த

வேண்டிய மனமாற்றத்திற்கான வழிமுறைகளை யோசிப்போம், அதனைச் செயல்படுத்தி கடவுளைப் புகழவும், அவரோடு நெருங்கி வரவும், நம் பக்தி முயற்சிகள் உதவியாக இருக்க இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நம்பிக்கையின் திருஉருவான இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகளுக்காக மன்றாடுகிறோம். உள்ளமும் செயலும் நன்மையைக் கனியாக ஈந்தால்தான் முழுமையாக மனிதம் மலர்கிறது என்பதை அவர்களின் வாழ்வின்மூலம் நாங்கள் அறிந்து மனிதம் மலரும் இடத்தில் புனிதம் மணம் வீசும் என்பதற்கினங்க எங்கள் வாழ்வை அமைத்துக்கொள்ள வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. மனிதன் எவ்வளவு தான் வாழ்வாங்கு வாந்தாலும், ஒருநாள் அவன் எதிலிருந்து உருவாக்கப்பட்டானோ அதிலேயே சேர வேண்டியவன் என்பதைக் குறிக்கும் இந்நாளில், நாங்கள் மனிதத்தின் மேன்மையை உணர்ந்து அதை மண்ணில் வித்தாக்கிட வேண்டிய அருளைப் பொழிந்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. இத்தவக்காலத்தில் இயேசுவின் பாடுகளைத் தியானித்தல், திருவழிபாட்டில் ஈடுபடுதல், பாவமன்னிப்பும், நற்கருணையும் பெறுதல் முதலிய உள்ளார்ந்த செயல்பாட்டுகளின் வழியாக எங்களை நாங்கள் பண்படுத்தி உமக்கேற்றவர்களாக வாழ வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. அன்பின் இறைவா, நாங்கள் எங்களுக்கு அடுத்திருப்போரின் சுக, துக்கங்களில் பங்கெடுத்து அவர்களின் துன்பத்தை எங்களுடையதாக நினைத்து எங்களால் முடிந்த உதவிகளைச் செய்து உமது பிள்ளைகளாக வாழ உமதருளைப் பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

## 07.03.2019 புனித பெர்ப்பெத்துவா மற்றும் பெலிசித்தா திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

இறையேசுவில் பிரியமான இறைமக்களே, இன்று நம் திருஅவை புனித பெர்ப்பெத்துவா, பெலிசித்தா ஆகிய இரு புனிதைகளைச் சிறப்பிக்கின்றது. புனித பெர்ப்பெத்துவா உயர்குலத்தைச் சேர்ந்த பெண்மணி. கார்தேஜ் நகரைச் சேர்ந்த இவர் தனது 22வது வயதில் பால்குடி மாறா தனது குழந்தையுடனும், எட்டுமாத கருவைத் தன் வயிற்றில் சுமந்தும் தனது அடிமைப் பெண் புனித பெலிசித்தாளுடனும், வேத கலாபனை நடந்த காலத்தில் கிறிஸ்தவ நெறியைத் தழுவி திருமுழுக்குப் பெற்றார். புனித பெர்ப்பெத்துவாவின் தந்தை கடுமையாக எதிர்த்தபோதும் கிறிஸ்து இயேசுவிடம் நம்பிக்கைக் கொண்டார்.

தங்களை மரணத் தீர்ப்புக்கு பலியாக்குவார்கள் என்றும், கொடூர மிருகங்களுக்கு இறையாக்குவார்கள் என்றும் தெரிந்தே அவர்கள் கிறிஸ்தவத்தில் இணைந்தார்கள். சுபேரிமூஸ் சேவேரு என்ற மன்னன் இவர்களுக்கு மரண தண்டனை விதித்தபோது புனித பெலிசித்தா இறைவனை மிக உருக்கமாக மன்றாடி தான் சிறையிலிருக்கும்போதே தன் குழந்தையைப் பெற்றெடுத்தாக வேண்டும் என்று வேண்டினாள். ஏனெனில் அக்கால சூழலில் கருவுற்றிருக்கும் பெண்களைக் கொல்லக் கூடாது என்ற சட்டத்தின்படி தன்னால் மறைசாட்சியாக உயிர் துறக்க முடியாது என்று தெரிந்தே இறைவனை மன்றாடினாள். அவ்வாறே அவருக்குக் குறித்த காலத்துக்கு முன்பே குழந்தைப் பிறந்தது 07.03.203 அன்று மன்னனின் தீர்ப்பின்படி இருவரும் தலைவெட்டப்பட்டு கொல்லப்பட்டு மறைச்சாட்சியானார்கள். கார்த்தேஜ் நகர பாதுகாவலர்கள் என்றும், தாய்மார்களுக்கும், கருவுற்றிருக்கும் தாய்மார்களுக்கும் கால்நடை வளர்ப்போர், பண்ணைத்தொழிலாளர்கள் என்ற பலதரப்பினருக்கும் பாதுகாவலர்களாக போற்றப்படுகிறார்கள். உயிரையே இழக்க நேரிட்டாலும் கிறிஸ்து இயேசுவை ஆழமாக அன்பு செய்யும் மனநிலையைப் பெற பக்தியுடன் இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. வழிநடத்தும் அன்பு இறைவா, திருஅவையை அரவணைத்து காக்கும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் திருநிலையினர் யாவரும் கிறிஸ்துவில் நம்பிக்கைக் கொண்டவர்களாகவும், திருஅவையின் செயலாக்கங்களில் பிடிப்பு உள்ளவர்களாகவும் தங்களது சாட்சிய வாழ்வினால் இறைவனின் மாட்சிமையை உலகெங்கும் பரப்ப அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. எல்லோரையும் அன்பு றசெய்யும் இறைவா, இறைவன்பால் தாம் கொண்ட அன்பின் வெளிப்பாட்டில் உறுதி கொண்டவர்களாக, எத்துனை துன்பம் வரினும் மறைசாட்சியராக உயிர் துறந்த புனித பெர்ப்பெத்துவா புனித பெலிசித்தா போன்று நம்பிக்கையில் மேன்மை கொண்டவர்களாக வாழ அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. பாதுகாக்கும் இறைவா, நேர்மையற்ற அரசியல்வாதிகள், சமத்துவம் காணா இறுமாப்புமிக்கவர்கள், மக்களைப் பலவித அறிவிப்புகள் மூலம் கலக்கமடையச் செய்யும் காரியவாதிகள் ஆகியோர் தங்களின் தவறான செயல்பாடுகளைத் தவிர்த்து உமக்கேற்ற மக்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 08.03.2019 இறைவனின் புனித யோவான் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிவில்சன்

இவர் மாபெரும் சேவை வீரர். போர்த்துக்கல் நாட்டினர். ஆனால் ஸ்பெயின் சென்று செல்வந்தர் இல்லத்தில் ஆடு மேய்த்தார். பின் பிரான்சு நாட்டின் படைவீரராக மாறினார். இவர் உள்ளம் எதையோ தேடியது. தனது பாவ வாழ்வை எண்ணிப் பார்த்தார். தன்னையே இறைவனுக்கு அர்ப்பணிக்கவும், அடிமை நிலையிலிருந்த கிறிஸ்தவர்களை மீட்கவும் முடிவெடுத்தார். தனது பாவ நிலையை இறைவன் மன்னிக்க, தன்னையே சாட்டையால் அடித்துக் கொண்டார். நோய்வாய்ப்பட்டவர்களைச் சுமந்து வந்து மருத்துவம் அளித்தார். அவர்களைக் குளிப்பாட்டி சுத்தம் செய்து, பாடுபட்ட சுருபத்தை முத்தி செய்யச் சொல்வார். குருவானவரை அழைத்து ஒப்புரவு அருட்சாதனம் பெறச் செய்வார். 20 ஆண்டுகளுக்குப் பிறகு "நன்மை செய்யும் சகோதரர்" என்ற பெயரில் மருத்துவனைகள் துவங்க, இன்றும் இவர் காட்டிய வழியில் தொண்டாற்றிக் கொண்டிருக்கின்றனர். பொருளுதவிக்காக வீதியில் சென்று நின்று செல்வந்தர்களைக் கெஞ்சி, கத்தி, கதறி, கேட்பார் ஓலமிட்டு கத்துவார். அதன் பயனாக பலர் உதவி செய்தனர். நற்கருணை ஆண்டவர்முன் உண்ணாமல், உறங்காமல், செபிப்பார். நற்கருணை முன் செபிக்கும்போதே தன்னுயிரை இழந்தார். இவரைப்போல் நாமும் இறைவனின் அன்பு பிள்ளைகளாக சேவை மனம் கொண்டு வாழ அருள்வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பு இறைவா, தாய் திருஅவையின் திருப்பணியாளர்களான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் இறைவனின் அழைத்தலை உணர்ந்தவர்களாக தங்களின் வாழ்வில் ஏற்படும் அனைத்து துன்பங்களையும் உம் பதம் சமர்ப்பித்து, பணியில் தொய்வடையாமல் துணிவுடன் செயலாற்ற உமதருளைப் பொழிந்திட வேண்டுமென உம்மை மன்றாடுகிறோம்.
2. ஆற்றல் மிக்க இறைவா, சேவை உள்ளத்தோடு பலர் பல அமைப்புகள், நிறுவனங்கள், மருத்துவமனைகள் அமைத்து பணிபுரிகின்றனர். அவர்கள் பணி சிறக்கத் தேவையான பொருளுதவியும், நிதியுதவியும் கிடைக்கப்பெற்று ஞானத்துடன் பணியாற்ற அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பு இறைவா, எம் இளையோருக்காகச் செபிக்கின்றோம். இவ்விளம்பருவத்தில் இவர்கள் பெறும் வருமானத்தில் ஏழை எளியோருக்கு உதவும் பண்பையும், வாழ்வில் மேன்மைமிக்கவர்களாக விளங்கக் கூடிய உயர்ந்த உள்ளத்தையும் இவர்கள் பெற்றிட அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 09.03.2019 உரோமை நகர் புனித பிரான்சிஸ் திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று நாம் உரோமை நகர் புனித பிரான்சிஸ் அவர்களின் நினைவைக் கொண்டாடுகிறோம். சிறுமி பிரான்சிஸ் தனது 11 வயதில் இருந்தே துறவியாக வேண்டுமென்ற எண்ணத்தில் வாழ்ந்து வந்தவர். அந்த தேவ அழைத்தலை உணர்ந்தவராய் தன் தந்தையிடம் தெரிவித்தபோது, அவரது முடிவு நிராகரிக்கப்பட்டு, திருமணம் செய்து வைக்கப்பட்டார். இருப்பினும் இல்லற வாழ்வில் கடமை தவறாமல் வாழ்ந்தாள். தனது கணவரின் இறப்பிற்குப் பின் தனது குடும்பப் பணியில் மேலும் அக்கரையோடு செயல்பட்டார். துறவறத்திற்கு ஒப்பான வாழ்வைக் கடைப்பிடித்து துறவற சபையைத் துவங்கி அதன் வழியில் இறைப்பணியாற்றினார். நம் எண்ணமன்று, கடவுளின் எண்ணமே இறுதியானது என்பதை இப்புனிதையின் வாழ்வில் நாம் அறிந்து கொள்ளலாம். இன்றைய நற்செய்தி வாசகம் நமது பாவ நிலையையும், இறைவனின் இரக்கத்தையும் நன்கு பறைச்சாற்றுகிறது. உண்மையிலே கடவுளின் முன்னிலையில் எல்லா மனிதருமே பாவிகள்தாம். இந்த உணர்வை நம்மில் எழுப்பவும் நாம் நம் வாழ்வை மாற்றியமைக்கவும் இந்த தவக்காலத்தில் உறுதியேற்கத் தொடர்ந்து திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நம்பிக்கையின் ஆழத்தைக் காட்டிய இறைவா, எம் திருஅவைக்காகவும், திருத்தந்தைக்காகவும் மன்றாடுகிறோம். எதிர்பாராத நிகழ்வுகளைத் தாங்கும் உறுதியான நெஞ்சம் கொண்டிருக்கவும், அத்தகைய சூழலில் உணர்ச்சிகளுக்கு இடமளிக்காது தம் தந்தைமீது அசைக்க முடியா நம்பிக்கைக் கொண்ட இயேசுவைப் போல எமது வாழ்வை அணுகத் தேவையான ஆற்றலால் இவரை நிரப்பியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்
2. இறைவனை நம்பி நாம் செய்கிற எந்தவொரு செயலும் பொய்த்துப் போவதில்லை. அது எப்போதும் நமக்கு வெற்றியே என்பதை உணர்ந்து, எங்களது நம்பிக்கையை ஆழப்படுத்த வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்
3. ஆண்டவராகிய இயேசுவே, எம் வாழ்க்கையில் நாங்கள் சந்திக்கின்ற அச்சம், அவமானம், கலக்கம், குழப்பம், துயரம், சாவு போன்றவைகளில் நம்பிக்கை இழந்துவிடாமல் உம்மைப் பற்றிக்கொள்ள அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 10.03.2019 தவக்காலம் முதல் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திருமதி. டிலைலா சேவியர்

I. இச. 26: 4-10 II. உரோ. 10: 8-13 லூக். 4: 1-13

தவக்காலம் இறைவன் நம் அருகில் உள்ளார் என்பதை உணரும் அருளின் காலம். தவக்காலம் மன்னிப்பின் காலம். தவக்காலம் இயேசுவின் பாடுகளை, தியாகத்தை, தியானித்து இறை இரக்கத்தைப் பெற்றுக்கொள்ள அழைப்பு விடுக்கும் காலம். தவக்காலத்தின் முதல் வாரத்தில் இருக்கும் நாம் இறை அருளையும் அன்பையும் பெற்று இறைவனோடு ஒன்றித்திருக்க, நம்மையே நாம் தயாரிக்க இன்றைய வாசகங்கள் அழைப்பு விடுக்கின்றன. இன்றைய முதல் வாசகம், எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்த மக்கள் தங்களுடைய விசுவாசத்தையும் நன்றியையும் வெறும் வார்த்தைகளால் வெளிப்படுத்தாமல், உழைப்பின் முதற்கனிகளை நன்றியாக அர்ப்பணிக்க வேண்டும் என்ற செயல் நம்மை கடவுளின் பிள்ளைகளாக்கும் என்று அறிவுறுத்துகிறது.

இரண்டாவது வாசகத்தில் கடவுளின் வார்த்தை நம் அனைவரின் நல்வாழ்வுக்கும் ஆற்றலை அளிக்கும் ஒன்றாக செயல்படுகிறது என்று தூய பவுல் தனது விசுவாசத்தை வெளிப்படுத்துகிறார். இந்த விசுவாசம் வாழ்வில் வெளிப்படும் விசுவாசமாக இருக்க வேண்டுமென்றும், மனிதன் தன் வாழ்வையே கடவுளின் நற்செய்திக்காக அர்ப்பணிக்க வேண்டும் என்றும் இத்தகைய வாழ்வு அனைவருக்கும் மீட்பைப் பெற்றுத்தரும் என்றும் கூறுகிறார்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு தன் பணிவாழ்வைத் தொடங்கத் தூய ஆவியால் அபிஷேகம் செய்யப்பட்டு அர்ப்பணம் செய்யப்படுகிறார். பின்னர் தூய ஆவியால் பாலைநிலத்திற்கு அழைத்து செல்லப்பட்டு அங்கே அலகையினால் சோதிக்கப்படுவதை வாசிக்கின்றோம். நம்முடைய அன்றாட வாழ்வில் அநேக சோதனைகளை சந்திக்கிறோம். நாம் இறைச்சட்டத்தையும், மனச்சாட்சியையும் மதிக்காமல் மனம்போன போக்கில் போகும்போது பாவம் செய்கிறோம். நாம் நம்முடைய சோதனையில் வெற்றிக்காண வேண்டுமென்றால், நாம் செபிக்க வேண்டும். "தானம் ஆன்மாவைச் சாவிலிருந்து மீட்கும். தவக்காலத்தில் நோன்பு இருந்து மனதை ஒருநிலைப்படுத்தி, இறைவனைத் தியானித்து பாவச் சூழலைத் தவிர்க்க வேண்டும். நம் வாழ்வு மனமாற்றம் என்ற உருமாற்றத்திற்கு இம்மூன்று நற்செயல்களும் (ஈகை, செபம், நோன்பு) இன்றியமையாதவை. சோதனையை வென்று, கடவுளின் அருளைப்பெற்று இறைவனோடு இணைய இத்தவக்காலத்தை ஒரு ஆன்ம பயணமாக மேற்கொண்டு மனமாற்றம் பெற இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரையும் ஆசீர்வதித்து நல்ல உடல் உள்ள நலம் தந்து, திருஅவையின் உறுப்பினர்களை ஆன்மீக நெறியில் அவர்கள் சிறப்பாக வழிநடத்த வேண்டிய அருளைத்தருமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. இரக்கத்தின் ஊற்றே இறைவா, இந்த தவக்காலத்தில் திருஅவை மனந்திரும்ப எமக்குக் கொடுத்துள்ள வாய்ப்பான ஒப்புரவு அருளடையாளத்தைப் பயன்படுத்தி, எம்முடைய குற்றங்களை ஏற்று இறைவனோடும், அயலாரோடும் ஒன்றித்திருக்கும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. மன்னிக்கும் மாபரனே இறைவா, உம்மைத் துன்புறுத்தியவர்களை நீர் மன்னித்ததுபோல நாங்கள் எங்கள் குடும்பங்களிலும், பணித்தளங்களிலும், பள்ளிகளிலும் ஏற்படும் மன வேற்றுமை, வெறுப்பு, பொறாமை போன்றவைகளை மன்னித்து அனைவரோடும் அன்பாகவும், நட்பாகவும் பழகக்கூடிய நல்மனதைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. அமைதியே உருவான இறைவா, துன்பத்தின் மறுபக்கமே இன்பம், துன்பங்கள்தான் உன்னதமான வாழ்வுக்கு இட்டுச்செல்லும் வழி என்பதை உணர்ந்து எமக்கு வரும் சோதனைகளை வெல்ல உம்மைப்போல தூய ஆவியாரின் துணையோடு அவைகளைச் சாதனையாக்கும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 17.03.2019 தவக்காலம் இரண்டாம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திரு. பி. விக்டர்

I. தொநூ. 15: 5-12, 17-18 II. பிலி 3: 17-4:1 லூக். 9: 28-36

இறைமகன் இயேசுவின் திருப்பெயரால் உங்கள் யாவரையும் இன்றைய திருப்பலி விழாவிற்கு வருக வருகவென்று உவப்புடன் வரவேற்கின்றோம். தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறான இன்று நம் ஆண்டவர் இயேசுவின் உருமாற்ற நிகழ்வைக் கொண்டாடி மகிழ்கின்றோம். இயேசுவின் உருமாற்றத்தின்பொழுது விண்ணில் தந்தையின் பாராட்டுக் குரல் ஒலித்தது. உன் வழிமரபினரைப் பெருகச் செய்வேன், வளமான இந்நாட்டை அவர்களின் உரிமை நாடாக வழங்குவேன் என்று ஆபிரகாமுக்கு ஆண்டவர் வாக்களிக்கின்றார் (தொநூ 15:5). இந்த வாக்குறுதியைக் குறிப்பிட்டே புனித பவுல் விண்ணகமே நமது தாய் நாடு, அங்கிருந்து மீட்பர் வருவார் என்று எதிர் நோக்கியுள்ளோம் (பிலி. 3:20) என்று விவரித்துள்ளார்.

நாம் இந்த பூமியிலே மனிதர்களாய் பிறந்திருந்தாலும் ஆண்டவர் இயேசுவை நம்பினதால் அவருடைய இரத்தத்தினால் கழுவப்பட்டு,

பாவத்திலிருந்து மீட்கப்பட்டு விண்ணகத்திற்கு உரியவர்களாக உருமாற்றம் பெற்றுள்ளோம். நமது இந்த உருமாற்றம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மீண்டும் இவ்வுலகிற்கு வரும் வரையிலும் நிலைத்திருந்தால்தான் அவரோடு விண்ணகம் செல்ல முடியும். அதற்குப் பிறகுதான் அவர் நமக்காக ஆயத்தம் செய்துவைத்துள்ள விண்ணக வீட்டை உரிமையாக்கிக்கொள்ள முடியும். ஏதோ ஒருநாள் உருமாறிவிட்டோம், எனவே நாம் விண்ணரசிற்குத் தகுதியானவர்கள் என்று உறுதி கூற இயலாது. எனவே நமது உருமாற்றம் என்பது ஒவ்வொரு நாளும் நிகழவேண்டும்.

உருமாற்றத்தைத் தொடர்ந்து தந்தையின் திருவுளத்தை முழுமையாக நிறைவேற்றிய இறைமகன் இயேசுவைப்போல நாமும் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுபவர்களாக ஒவ்வொரு நாளும் வாழ முயல்வோம். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைப்போல சுயசித்தம் மறுத்து இறைச்சித்தம் நிறைவேற உழைப்பதற்கு உறுதியேற்போம். புனித பவுலைப்போல நமது விண்ணகத் தாய் நாட்டை கண்முன் நிறுத்துவோம். அதை அடைவதற்கு நல்லதொரு போராட்டம் செய்ய ஆயத்தமாவோம், இவற்றிற்கான வரம் வேண்டி இத்திருப்பலியில் நாம் இணைந்து மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லோரையும் அன்பு செய்யும் இறைவா, இவ்வுலகில் உமது திருஅவையை வழிநடத்தும் எமது திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகளுக்குத் தேவையான ஞானத்தையும், அறிவையும் உமது வல்லமையையும், வரங்களையும் வழங்கி மக்களை உமக்கேற்ற விதத்தில் உருவாக்கிட, உருமாற்றிட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. வாக்கு மாறாத வல்லவரே இறைவா, விண்ணரசில் எமக்கான இடத்தை ஆயத்தம் செய்து வைத்து மீண்டும் இவ்வுலகிற்கு வந்து எம்மை அழைத்துச்செல்ல இருப்பவரே, உமது வருகையின்போது உம்மை எதிர்கொண்டு வரவேற்க நாங்கள் தகுதியுள்ளவர்களாக எங்களை மாற்றியருள உம்மை மன்றாடுகிறோம்.
3. அதிகாரங்களைப் பகிர்ந்தளித்த இறைவா, எம்மையாளும் எமது இந்திய திருநாட்டின் தலைவர்களை, ஆட்சியாளர்களை, அதிகாரிகளை, அரசியல்வாதிகளை ஆளுகை செய்வீராக. நாட்டை வளமான பாதைக்கு இட்டுச்செல்லும் வழிகாட்டிகளாக இவர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட மக்களை ஆளும் உரிமையைச் சரியாகச் செயல்படுத்திடவும், சுயநலம் துறந்து பொதுநலம் பேணி வாழ்ந்திடவும் வரமருள வேண்டுமென உம்மை மன்றாடுகிறோம்.
4. ஞானத்தின் இருப்பிடமே இறைவா, இவ்வாண்டு அரசுத் தேர்வு எழுதயிருக்கும் எழுதிக்கொண்டிருக்கும் 10,11,12 மாணவ

மாணவிகளை ஆசீர்வதியும். ஆண்டவர்தாமே மனமிரங்கி இவர்களுக்கு நல்ல உடல் நலத்தையும், மனத் தெளிவையும், படித்த பாடங்களை மறந்துவிடாமல் நினைவுக்கூர்ந்து சிறப்பாகத் தேர்வு எழுதக்கூடிய நல்ல ஞாபக சக்தியையும் தந்து சிறந்த மதிப்பெண்கள் பெறவும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 18.03.2019 எருசலேம் நகர் புனித சிரில் திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

இறையேசுவின் அன்புமிக்க சகோதரிகளே, சகோதரர்களே, இன்று திருஅவையானது எருசலேம் நகர் புனித சிரில் திருவிழா திருப்பலிக்கு நம்மை அழைக்கிறது. புனித சிரில் 315ம் ஆண்டு பிறந்து எருசலேமில் வளர்ந்தார். இவருடைய பெற்றோர் கிறிஸ்தவர்களாக இருந்ததால் தமது மகனும் கிறிஸ்தவராக திருமுழுக்குப்பெற்றிட இவரை புகுமுக பயிற்சி இல்லத்திற்கு அனுப்பினார்கள். பயிற்சி முடித்து திருமுழுக்குப் பெற்ற புனிதர் இறைவனுக்கு உகந்த மகனாக வளர்ந்தார்.

திருமணம் செய்து கொள்ளாமல் அதே வேளையில் தன்னுடைய இல்லத்திலேயே தங்கியிருந்து கற்புநெறி பிறழாது வாழ்ந்து வந்தார். ஒறுத்தல் முயற்சிகள் செய்து தனித்துறவு வாழ்வு வாழ்பவர்களின் குழுவில் இந்த புனிதர் இணைந்திருந்தார். பின்பு இவர் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். ஆயர் மாக்சிமூஸ் இறந்ததும் இந்த புனிதர் எருசலேம் ஆயராக நியமிக்கப்பட்டார். இந்த காலக்கட்டத்தில் இறைத்தந்தையும், இயேசு கிறிஸ்துவும் ஒரே இறையியல்புக் கொண்டவர்கள் அல்லர் என்ற ஆரியுஸின் தப்பறைக் கொள்கைப் பரவி பெரும் தீமையை விளைவித்தது. இவருடைய ஆயர் பதவியையும் பரித்தனர். ஜீலியன் என்பவர் ஆட்சிக்கு வந்தவுடன் திருஅவை அமைதியுடன் செல்லவும், தமது ஆட்சி சிக்கலில்லாமல் நீடிக்கவும் நாடு கடத்தப்பட்ட ஆயர்களை மீண்டும் பொறுப்பில் வைத்தார். பேரரசர் கொன்சால் ஜீலியனை தோற்கடித்தவுடன் எருசலேமை விட்டு மீண்டும் ஓடினார் சிரில். 381ம் ஆண்டு கொன்ஸ்தாந்திநோபிள் ஆரியுசின் நம்பிக்கை அறிக்கையை நிராகரித்து ஆரியூசைக் கண்டித்தது. ஆரியுசின் தப்பறைகளுக்கு எதிராகப் போராடியச் சிரிலை பாராட்டியது. அடுத்து வந்த ஆண்டுகளில் ஆயர் பணியாற்றி 386ல் புனிதர் இறந்தார். கிறிஸ்துவின் சிலுவையைப் பற்றி நாம் வெட்கப்படக்கூடாது. ஒவ்வொரு செய்கையையும் சிலுவை அடையாளம் வரைந்துதான் நாம் ஆற்ற வேண்டும் என்று புனிதர் அடிக்கடி கூறுவார். எத்துன்பம் வந்தாலும் கிறிஸ்துவின் கொள்கைகளை வாழ்ந்துக் காட்டும் அருள் வேண்டி இத்திருப்பலியில் செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் இறைவா, எம் திருஅவையை வழிநடத்தும் எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், நம்பிக்கையாளர்கள்

தங்களது சிலுவையை எடுத்துக்கொண்டு நம்பிக்கையோடு உம்மைப் பின்பற்ற வேண்டிய வரம் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

2. ஆறுதலின் தேவனே, எம் நாட்டு மக்களையும் எம் தலைவர்களையும் ஆசீர்வதித்து வளமையும், அன்பும் ஒற்றுமையும் நிறைந்த நாடாக எம் நாட்டை மாற்றிட உமதளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. உண்மையின் இறைவா, எம் நாட்டில் உள்ள இளைஞர்கள், இளம் பெண்கள், குழந்தைகள், முதியோர் அனைவரும் நல்வாழ்வு பெற்று வளமுடன், அன்புடன், நட்புடன் வாழ்ந்திட அருள் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 19.03.2019 கன்னி மரியாவின் கணவர் புனித யோசேப்பு பெருவிழா

**முன்னுரை** வேதியர். செபஸ்டின்

I. 2சாமு. 7: 4-5, 12-14,16 II. உரோ. 4: 13, 16-18,22 மத் 1: 16,18-21,24

இறையேசுவில் அன்பு உறவுக்கொண்ட சகோதர சகோதரிகளே, உங்கள் அனைவரையும் இப்புனித பலிக்கு இயேசுவின் பெயரால் இனிதே வரவேற்கின்றோம். இன்று நாம் புனித கன்னி மரியாளின் கணவர் குடும்பங்களின் பாதுகாவலர் புனித யோசேப்பின் திருவிழாவைக் கொண்டாடுகின்றோம். இறைவாக்கினர் நாத்தான் வழியாக தாவீதுக்கு யாவே கடவுள் தந்த செய்தி. "நீ உன் மூதாதையரோடு துயில்கொள்ளும்பொழுது உனது வழிமரபை உயர்த்தி அவனது அரசை நிலைநாட்டுவேன். உனது குடும்பமும், உனது அரசும் உறுதியாய் நிலைத்திருக்கும் என்றார்". அந்த தாவீதின் வழித்தோன்றலாக வந்தவர்தான் புனித யோசேப்பு. இந்த யோசேப்பின் வளர்ப்பு மகன்தான் ஆண்டவர் இயேசு கிறிஸ்து. புனித யோசேப்பின் தனிச்சிறப்பு வாய்ந்த குணநலன்களை நாம் நினைவுக்குக் கொண்டுவருவோம். இவர் ஓர் தச்சர், திருக்குடும்பத் தலைவர், நேர்மையுள்ள பண்பான கணவர், நீதிமான், பொறுப்புமிக்க தந்தை, ஏழ்மையிலும் நேர்மை தவறாதவர், இறைத்திருவுளம் நிறைவேற்றுவதில் தாமதம் இன்றி செயல்பட்டவர். தனக்கு நேர்ந்த வருத்தத்தையும், அவமானத்தையும் பொருட்படுத்தாமல் இறைத்திட்டத்திற்கு முற்றும் கீழ்ப்படிந்தவர். இவரது பொறுப்பிலே இயேசு பிறந்தார், வளர்க்கப்பட்டார். புனித யோசேப்பின் மரணத்திற்குப் பின்பு, இயேசுவின் இறையாட்சி நிலைவாழ்வு தரும் இறையாட்சியாக நிலைப்பெற்றது. தாவீதுக்குச் சொல்லப்பட்ட வாக்கு யோசேப்பு இயேசுவில் நிறைவேறியது.

இப்பேறுபெற்ற புனித யோசேப்பின் விழாவினைச் சிறப்பிக்கும் நாம் அவரிடம் விளங்கிய நற்பண்புகளை நமதாக்கிக் கொள்ளவும், சிறப்பாக ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிதல் எனும் புனிதப் பண்பில் திருஅவையும் நம் குடும்பங்களும் என்றும் அவரைப் பின்பற்றி வாழ அருள் வேண்டுவோம்.

திருஅவையோடு பாதுகாவலராக இருக்கும் புனித யோசேப்பு நம் பங்கு, குடும்பங்கள் அனைத்திற்கும் பாதுகாவலராக இருக்கவும் புனித யோசேப்பு வழியில் இயேசுவை ஆதாயமாக்கிக்கொள்ளவும் இப்பலியில் உறுதியுடன் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. **நம் தாய் திருஅவைக்காக மன்றாடுவோம்:** எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் புனித யோசேப்பிடம் விளங்கிய நற்பண்புகளை முன்மாதிரியாகக் கொண்டு தங்கள் வாழ்வில் இறையனுபவம் பெறவும், திருஅவை எனும் பெரிய குடும்பத்தை இறைத்திட்டத்தின்படி துடிப்புடன் நடத்திச்செல்லவும் அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. **நாட்டுத்தலைவர்களுக்காக மன்றாடுவோம்:** நல் ஆயனாம் இறைவா, உம் மக்களை ஆளும் அதிகாரம் பெற்றவர்களும், வழிநடத்தும் ஆட்சியாளர்களும் புனித யோசேப்பு போன்று கரிசனையுடனும், நேர்மையுடனும் வழிநடத்தத் தேவையான ஆசியைப் பொழிந்திட உம்மை மன்றாடுகிறோம்.

3. **வேலை வாய்ப்பற்றவர்களுக்காக மன்றாடுவோம்:** வேலை இல்லாமல் தவிக்கும் இளைஞர், இளம் பெண்களுக்கு நல்லதொரு வேலை வாய்ப்புக் கிடைக்கவும், வேலையில் இருப்போர் உழைப்பை வெளிப்படுத்தி படைப்பை நிறைவுக்குக் கொண்டுச் செல்லும் உன்னத உணர்வுடன் உழைக்கவும் வரம்வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

4. **இங்கு குழுமியுள்ள குடும்பங்களுக்காக வேண்டுவோம்:** அருள்பொழியும் இறைவா, ஒவ்வொரு குடும்பமும் இறை நம்பிக்கையுள்ள குடும்பமாய் விளங்க வேண்டுமென புனித பவுல் செபித்தார். அதன் பொருள் திருக்குடும்ப முன்மாதிரியே. இதை மனதில் கொண்டு எம் அனைவரின் குடும்பங்களிலும் இறைபிரசன்னம் நிறையும் விதத்தில் நற்பண்பு, நற்செயல்களால் ஒருவரையொருவர் தாங்கி வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 24.03.2019 தவக்காலம் மூன்றாம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. D.V.R. ராஜா

I. விப. 3: 8, 13-15 II. 1கொரி. 10: 1-6, 10-12 லூக். 13: 1-9

அன்பின் இறைசமூகமே, நாம் ஒவ்வொருவரும் மனம் மாறவும், இறைவனின் குரலுக்குச் செவிசாய்க்கவும் இத்தவக்காலத்தில் இன்றைய சிந்தனையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. நம்மில் பலரும் நம் கஷ்டங்களினாலும், கவலைகளினாலும், பொருளாதார குறைபாடுகளினாலும் இறைவனின் குரலைப் புறக்கணித்து எவ்வளவுதான் வேண்டினாலும் எங்கே நடக்கப் போகிறது என்ற நம்பிக்கைக் குறைவால்

பல நேரங்களில் முணுமுணுக்கின்றோம். எத்தனையோ மறையுரைகளைக் கேட்டாலும் பக்தி முயற்சிகள் மேற்கொண்டாலும் பல தவக்காலங்களைச் சந்தித்தாலும் இடர்வரும்போது நம்பிக்கைக் குறைவினால் ஆண்டவரின் கூக்குரலை அவமதிக்கின்றோம். இன்றைய இருவாசகங்களின் மையக் கருத்தும் எகிப்தியரிடம் அடிமைப்பட்டிருந்த இஸ்ரயேலரின் புலம்பலைக் கேட்டு ஆண்டவர் அவர்களை விடுவிக்க எத்தனையோ அதிசய அற்புதங்களை நிகழ்த்தியும் அவர்கள் மனம் மாறாமல் முணுமுணுத்து கடவுளின் கோபத்திற்கு ஆளானதையும் நாம் அறிவோம்.

நற்செய்தியில் தந்தையாம் இறைவன் தோட்ட உரிமையாளராகவும், மரத்தைப் பாதுகாப்பவர் நம் மீட்பராகவும் உருவகப்படுத்தி நம் ஆண்டவர் கூறுவதுபோல அமைந்துள்ளது. இறைவன் தம் மக்களைப் பாலும் தேனும் பொழியும் நாட்டுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறினாலும், தேர்ந்துக் கொண்ட மக்களிடம் சில நல்ல பண்புகளை எதிர்ப்பார்க்கின்றார். இறைவனோடு இணைந்து இறைவார்த்தையை நம் கண்முன் கொண்டு இறை இயேசுவோடு இத்தவக்காலத்தில் இணைவோம். நம் பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்பு வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பு இறைவா, நீர் தேர்ந்துக்கொண்ட உமது அடியாராகிய எங்கள் திருத்தந்தையின் உடல் உள்ள நலனைப் பாதுகாத்து ஆசீர்வதியும், உமது திருஅவையின் மாண்பு மற்றும் புனிதத்துவம் குலையாமல், தனித்திறனுடன் உலக மக்களை வழி நடத்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. இரக்கமுள்ள தந்தையே, எம் பங்கு மக்கள், சோதனையிலும், இடர் நேரிடும் நேரங்களிலும் நம்பிக்கையோடு அனைத்தையும் பெற்றுக்கொள்ளக் கூடிய மனவுறுதியையும், பகிர்ந்து வாழும் நல்மனதையும் இத்தவக்காலத்தில் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. பரிவுள்ளம் கொண்ட பரமனே, எமது இளைஞர்கள், இளம் பெண்கள், குழந்தைகள் கல்வியிலும், பணியிலும், முன்மாதிரிகளைப் பின்பற்றி வாழ்வில் உயரவும், பெற்றோரையும், உடன்பிறந்தோரையும், திருஅவையையும் மதிக்கும் சிறந்த பிள்ளைகளாக வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. நீதியின் வழியில் நடத்தும் இறைவா, எமது நாட்டிற்கு மனித நேயத்துடனும், நேர்மையுடனும் வாழும் ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுத்து நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டுச்செல்லும் திறமையை அவர்களுக்கு அளித்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 25.03.2019 இயேசுவின் பிறப்பு முன்னறிவிப்பு பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜீசஸ் மகுட மன்னன்

I. எசா 7: 10-14, 8:10 II. எபி. 10: 4-10 லூக் 1: 26-38

ஆதிப்பெற்றோர் செய்த தொடக்க நிலைப்பாவத்திலிருந்து மீட்புப்பெற, ஆயிரமாயிரம் ஆண்டுகள் காத்திருந்து, கன்னிமரியாவுக்கு மங்கள வார்த்தைச் சொல்லும் பெருவிழாவை திருஅவைக் கொண்டாட நம்மை அழைக்கிறது. காலம் நிறைவேறியபோது திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்த நம்மையெல்லாம் மீட்டு நம்மைக் கடவுளின் பிள்ளைகளாக்குமாறு கடவுள் பெண்ணிடம் பிறந்தாக வேண்டும் (கலா.4:4) என்பது மீட்புத் திட்டம். காலம் நிறைவேறிவிட்டது கடவுள் கன்னிமரியாவிடம் தூது அனுப்புகிறார்.

தூதரின் வாழ்த்துரை மீட்பு வரலாற்றில் மங்களகரமான தருணமாக அமைகிறது. கடவுளே தன் வானதூதரை மரியாவிடம் அனுப்பி வாழ்த்துகிறார். மரியாவின் வாழ்வில் அவர் முழு சுதந்திரத்துடன் இறைத்திட்டத்தை ஏற்று கடவுளோடு உடன் உழைப்பாளர் (1கொரி. 3:9) என்ற மனநிலையோடு மற்றெந்த மானிடப் பிறவியையும்விட வெகுவாய் இறையருளோடு ஒத்துழைக்கிறார். மேலும் கடவுளின் ஒட்டுமொத்த மீட்புத்திட்டமும் (தொநூ. 3:15, கலா.4:4) மரியாவின் ஒத்துழைப்பைச் சார்ந்திருந்தது. இந்த ஒத்துழைப்புதான் மனித குலத்திற்கான மீட்பின் கதவு திறக்கப்படுவதற்குக் காரணமாயிருந்தது.

பேராயர் புல்டன் ஷீன் அவர்கள் இது குறித்துக் காட்டும்போது "எப்படி முதல் மனிதனின் வீழ்ச்சி சுதந்திரமான நடவடிக்கையாக இருந்ததோ, அதுபோலவே மனித மீட்பும் சுதந்திரமாக நடை பெறவேண்டும். மரியாவுக்குத் தூதனுப்பிய அந்த நிகழ்வில் கடவுள் தான் படைத்த உயிரிடம் (மரியாவிடம்) தன்னை இந்த மனிதத்துக்குள் இணைத்துக்கொள்ள உதவுமாறு, மரியாவின் சுதந்திரமான ஒத்துழைப்பை நாடினார்" என்று சொல்கிறார். மேலும் மரியாவைத் தன் தாயாகத் தேர்ந்துக்கொள்கிறார். எனவே நாமும் இயேசுவின் தாய் மரியாவை நம்முடைய தாயாக ஏற்றுக்கொண்டு நமது மீட்புக்கு முழுமனதோடு ஒத்துழைக்க பக்தியோடு இப்பெருவிழாத் திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. என் கடவுளே, உமது திருவுளத்தை நிறைவேற்றுவதில் மகிழ்ச்சியடைகிறேன். கத்தோலிக்கத் திருஅவையைத் தூய ஆவியால் வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வழியில் கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார், வேதியர், பொதுநிலையினர் அனைவரும் தாம் புனித வாழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை உணரவும் வறியோர், சிறியோர்

மட்டில் அவர்கள் அக்கறைக்காட்டி அவரவர் தேவைக்கேற்றபடி உதவி செய்யத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. நிலவுலகை நீதியுடனும், மக்களினங்களை உண்மையுடனும் அவர் தீர்ப்பிடுவார். உலகிலும் நாட்டிலும் நீதியின் கரம் வலுப்படவும், நீதியுள்ள தலைவர்கள், தேர்ந்தெடுக்கப்படவும் சுயநலத்தை விடுத்து அனைத்து துறை அதிகாரிகளும், இந்திய ஜனநாயகத்திற்கு ஊறுவிளைவிக்காமல் சிறுபான்மையினரின் தேவைகளை உணர்ந்து ஆட்சி புரியவும் தேவையான வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. "நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு ஆகட்டும்" எங்கள் பங்கின் ஒவ்வொரு குடும்பத்தையும், உம் பதம் சமர்ப்பிக்கின்றோம். உமது அரவணைப்பிலும், பாதுகாப்பிலும் வாழத் தடையாக உள்ள கடன் தொல்லைகள், விநோத நோய்கள், குடிப்பழக்கம், போதைப் பழக்கம் முதலியவற்றுக்கு குடும்பத் தலைவரும், இளைஞர், இளம்பெண்களும் அடிமையாக வாழ்வதிலிருந்து விடுபடத் தேவையான வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. "உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடித்தார்" ஏழைகள், ஒடுக்கப்பட்டோர், அனாதைகள், விதவைகளுக்கு சமூக அக்கறையுடன் கூடிய நீதியை வழங்கவும், உமது உதவிக்கரத்தை அவர்களுக்கு அளித்தருளவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 31.03.2019 தவக்காலம் நான்காம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

I. யோசுவா 5: 9,10-12 II. 1கொரி 5: 17-21 லூக் 15: 1-3, 11-32

இறை இயேசுவில் நம்பிக்கையுள்ள இறைமக்களே, இன்று நாம் தவக்காலம் நான்காம் ஞாயிறு சிந்தனைகளைச் சிந்திக்க அழைக்கப்படுகிறோம். இன்றைய முதல் வாசகத்தில் இஸ்ரயேல் மக்களை எகிப்தியரின் பழிச்சொல்லிலிருந்து விடுவித்து, தங்களின் குற்றங்களை மறந்து புதுவாழ்வு வாழ ஆண்டவர் அழைப்பதையும், இறைவன் தங்களை மன்னித்து குற்றப்பழியிலிருந்து விலக்கியதுபோல, நாமும் நம்மைச் சார்ந்தவர்களை, சந்திப்பவர்களை, மன்னித்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், இந்த மன்னிக்கும் பண்பை அனைவருக்கும் எடுத்தியம்பி அவர்களையும் இறைவனின் பிள்ளைகளாக மாற்ற வேண்டும் என்றும், புனித பவுல் கொரிந்து நகர மக்களுக்கு எழுதிய கடிதம் வழியாக நமக்கு அறிவுறுத்துகிறார். இன்றைய நற்செய்தியில் நம் ஆண்டவராகிய இயேசு மன்னிப்பின் சிறப்பை தனது மக்களுக்கு ஊதாரி மைந்தன் உவமை வழியாக எடுத்துக் கூறுகிறார்.

இதில் முக்கியமாக ஒரு அனுபவத்தைக் குறிப்பிட வேண்டும். அது இறை இயேசு பெற்ற அப்பா அனுபவம், அவரது இறையாட்சிப் பயணத்தில் எத்தனை சவால்கள் வந்தாலும் தனது தந்தையாம் இறைவனிடம் தனிமையில் சென்று செபித்து, மன்றாடி, உறவாடினதை நாம் திருவிவிலியத்தில் வாசித்து தியானிக்கிறோம். இந்த அனுபவத்தை இன்றைய வாசகங்கள், நமக்கு அழகாக எடுத்துரைக்கின்றன. இறை இயேசு மிக நயமாக இந்த அனுபவத்தை ஒரு உவமையின் வாயிலாகக் கூறுகிறார். என்ன நடந்தாலும் என் தந்தை ஏற்றுக்கொள்வார். அன்பு செய்வார், அவரணைப்பார் என அந்த ஊதாரி மகன் தந்தையைத் தேடி வந்ததுபோல் நாமும் இறைவனோடு இணைந்து ஒன்றித்து வாழ இறையருள் பெறுவோம். இத்தவக்காலத்தில் நாமும் மன்னிப்பைப் பெற்று பிறரையும் மன்னித்து, நாம் வாழும் இந்த பூமி அன்பின் உலகமாக மன்னிப்பின் ஆலயமாகத் திகழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையின் தலைவரே இறைவா, எம்திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் அனைவரும் இறையேசு பெற்ற அனுபவத்தைப் பெற்று வல்லமையோடு செயலாற்றி இறைமக்களை இறைவனிடம் அழைத்துவர நீர் ஆசீர்வதித்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. தாயும் தந்தையுமான இறைவா, எம் பங்கில் உள்ள பொறுப்பாளர்களை உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள குழுக்களை தந்தையின் அன்புள்ளத்தோடு வழிநடத்திட பொறுமையையும், தாழ்ச்சியையும் தந்து அவர்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. குடும்பத்தின் தலைவரே இறைவா, எங்கள் குடும்பங்களில் நாங்கள் சந்திக்கும் பிரச்சனைகளில், தோல்விகளில் துவண்டு, உலக போக்கில் சென்றுவிடாமல், தந்தையாம் உம்மில் ஒன்றித்து, அன்பைப் புரிந்து துன்ப நேரங்களில் மனவுறுதியுடன் வாழும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. கருணைக் கடலே இறைவா, எம் தமிழகத்தில் நீதிக்காய் போராடும் மக்களின் நிலையைக் கண்ணோக்கும். எங்கள் தலைவர்களின் உள்ளங்களில் இரக்கத்தைப் பொழிந்து போராடும் மக்களுக்கு நல்ல தீர்ப்பைப் பெற்றுத்தர அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# பகுதி - 2: விசுவாசத்தில் வளர...

## புனிதத்தில் வழிநடத்தும் தவமும், ஒறுத்தலும்

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

இறைமகன் இயேசுவை வரவேற்க திருவருகைக் காலத்தில் நம்மையே நாம் தயார் செய்தோம். இயேசுவின் பிறப்பு விழாவைக் கொண்டாடி அகமகிழ்ந்தோம். மனுவுருவான இயேசு நம்மோடு தங்கி, நம்மைப் பாதுகாப்பாக வழிநடத்தி வருகின்றார் என்னும் மகிழ்வில் திளைத்திருக்கிறோம். மனுவான இறைவன் நாம் அனைவரும் இம்மை வாழ்வில் மட்டுமல்ல, மறுமையிலும் அவரோடு ஒன்றித்து வாழ, மகிழ்ந்து வாழ தமக்கென விண்ணகத் தந்தை காட்டிய ஒரு தனி வழியைப் பின்பற்றினார். அவர் வழியைப் பின்பற்றி அவரைப் பிரதிபலித்து நிலையான வாழ்வைப் பற்றிக்கொள்ள வழிகாட்டும் காலம்தான் தவக்காலம். இந்தத் தவக்காலம் திருநீற்றுப் புதனோடு ஆரம்பமாகிறது. தவம் என்பது என்ன? இந்த தவக்காலத்தை நாம் எப்படி சந்திக்கப் போகிறோம்?

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
ஆற்றே தவத்திற்கு குரு" (குறள் 261)

தனக்கு வரும் துன்ப துயரங்களையும் பொறுமையோடு ஏற்றுக்கொண்டு வாழ்வதும், பிற உயிர்களுக்கு எவ்வித தீமையும் செய்யாமலிருப்பதே தவத்தின் இலக்கணம் என்று குறிப்பிடுகின்றார். இதற்கும் மேலாக இறைமகன் இயேசு "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" (மாற்கு 8: 34) என மொழிகின்றார். ஒவ்வெரு மனிதனின் அன்றாட வாழ்வில் ஏற்படும் துன்ப துயரங்களை உளமாற ஏற்றும், உலக வாழ்க்கைக்குத் தன்னைக் கையளிக்காமல், உலக வாழ்வில் தன்னை இழந்துவிடாமல் நான் எனது என்னும் பற்று அறுத்து வாழ்தல் பெருந்தவம். இந்தக் கூற்றையே கவியரசு கண்ணதாசன் கூறுவார், காவிஉடை புனைவதும் கமண்டலம் ஏந்துவதும், உத்திராட்சைக் கொட்டை அணிவதும் தவமல்ல என மறைமுகமாக சுட்டிக் காட்டுகிறார். இதற்காக நோன்பிருக்கும்போது ஒரு கிலோ இறைச்சிக்குப் பதிலாக மூன்று கிலோ மீன்களை வாங்கிச் சாப்பிடுவது ஒரு மாற்றாக அமையுமே தவிர, அது தவமுயற்சியும் ஆகாது, தவச் செயலும் ஆகாது, அப்படியென்றால் எதுதான் தவம்?

கவிஞர் இராபர்ட் கூறுகிறார். நீ உண்ணும் உணவில் ஒரு பகுதியைப் பசியால் வாடும் ஓர் ஏழைக்கு அளித்து அவனை மகிழ்விப்பதே தவம் என்கிறார். மேலும் நீ மனம் வருந்தும் உள்ளம் கொண்டு வாழ வேண்டுமா? நீ செய்யும் பாவத்திற்குப் பட்டினிபோடு. அதாவது ஒருவன்

தன்னையே ஒறுத்தல் முயற்சிகளால் தூய்மைப்படுத்திக் கொள்ளுதல் சிறந்த தவம் என்கிறார். இத்தவமும் ஒறுத்தலும் தான் நம்மைப் புனிதத்தில் வழி நடத்துகின்றன. நம் அயலானின் அவல நிலையைப் போக்குதலும், அமைந்த உள்ளம் பெறுதலும் நம் கண்ணால் காண்கின்ற அயலானையும் கண்காணா இறைவனையும் மகிழ்விக்கின்றது. இங்கே இறையன்பும் பிறரன்பும் பேணப்படுகின்றன. நமது ஆன்மாவின் பாவச்சுமைக் குறைகிறது. தன்னலம் வேரறுக்கப்படுகிறது. இறையருள் நம்மை நிரப்புகிறது. நாம் ஒளியின் மக்களாக வலம் வருவோம். எனவே தவம் செய்வோம், நம் பாவங்களுக்குப் பரிகாரம் புரிவோம். நம் தவ முயற்சி எப்படி இருக்க வேண்டும்? "நீ நோன்பிருக்கும்போது வெளிவேடக்காரரைப்போல் முகவாட்டமாய் இருக்க வேண்டாம்" என்றும், "நீ நோன்பிருக்கும்போது தலைக்கு எண்ணெய் தடவி முகத்தைக் கழுவு அப்பொழுது நீ நோன்பிருப்பது மனிதனுக்குத் தெரியாமல் மறைவாயுள்ள உன் தந்தைக்கு மட்டும் தெரியும். அவரும் உனக்குப் பிரதிபலன் அளிப்பார் என்றும் இயேசு கூறுகிறார்.

இங்கே இயேசு குறிப்பிடும் தவம் அல்லது நோன்பு அல்லது தவ முயற்சிகள் அகத்தில் நடைபெறுவன. இறை அகத்தில் நிகழும் அகநிகழ்வுகளாக இருப்பதால் நாம் நமது ஐம்புலன்களையும் ஒருமைப்படுத்தி, அடக்கி சுக நிகழ்வுக்கு வழி வகுக்க வேண்டும். இந்த அக நிகழ்விற்குத் துணை புரிவன நற்போதனைகள், நற்சிந்தனைகள், அதன் பலன் அறச்செயல் செறிந்த அற்புதமான வாழ்வு. இந்த அற்புதமான வாழ்வைப் பெறத்தான் மனமாற்றம் பெறவேண்டும். இந்த மனமாற்றம் பெற உகந்த காலம்தான் தவக்காலம். இந்தத் தவக்காலத்தில் இறைவனின் மாபெரும் இரக்கத்தை உணர்ந்து வாழ்வில் புதுவாழ்வு, திருந்திய வாழ்வு, இறைவனின் நெருங்கிய அன்புறவு கொண்ட வாழ்வு, பிறரையும் அன்பு செய்து அரவணைத்து வாழ்கின்ற வாழ்வு. இறைவனைப் பிறரில் கண்டுணர்ந்து உதவிடும் வாழ்வு, நம்மையே உணர்ந்து திருந்தி வாழும் தியாக வாழ்வு போன்ற எல்லா நிலைகளிலும் நாம் வாழ நமக்கு வாய்ப்பளித்திருக்கும் காலம் இத்தவக்காலம். ஆன்ம வளம் பெற ஆண்டவனின் அன்பில் வளர வாய்ப்பளிக்கின்ற இத்தவக்காலத்தில் இறைமகன் நம்மைத் தேடி வருகின்றார். கல்வாரி காட்சியைக் கண்ட பின்னும் நீ கலங்கமாட்டாயா? கசிந்துருக மாட்டாயா? என்ற கேள்விகளை இயேசு நம்மைக் கேட்டு சிந்திக்க வைக்கிறார்.

**இவ்வாறு நாம் நம்மை ஒறுத்து தவம் செய்வதால் நாம் பெறும் நன்மை என்ன?**

முதன் முதலில் உடல் ரீதியாக நலம் பெறுகின்றோம். உடல் நலம் பெறுவதைவிட ஆன்மீக நலன்களை அபரிமிதமாய்ப் பெறுகிறோம். முதலில் இயேசுவோடு ஒன்றித்திருக்கிறோம். அவருடைய பாடுகளில்

ஒன்றிக்கிறோம். "திருஅவையாகிய தன் உடலின் பொருட்டு கிறிஸ்து படவேண்டிய வேதனைகளில் இன்னும் குறைவாய் இருப்பதை என் உடலில் நிறைவாக்குகின்றேன்" (கொலோ 1: 24 என புனித சின்னப்பர் எடுத்துரைக்கின்றார். நாம் இயேசுவோடு மட்டுமல்லாது இயேசுவின் உடலாகிய திருஅவையின் வேதனையிலும் பங்கு பெறுகிறோம். பாவப் பரிகாரம் புரிகிறோம். இதனால் அன்றாட வாழ்விற்குத் தேவையான இறையருளை நாம் பெறுகின்றோம்.

இரண்டாவதாக நாம் இயேசுவின் இறப்பில் ஒன்றிக்கிறோம். நான் எனது எனும் தன்னலத்தைத் துறக்கின்றபோது இயேசுவின் சிலுவையில் அதை அறைந்து இறப்பில் ஒன்றாக்கி இனிமையைச் சுவைக்கின்றோம். பவுலடியாரின் வார்த்தையாம் "காலத்தை நன்கு பயன்படுத்துங்கள்" என்பதற்கேற்ப இந்த தவக்காலத்தில் சிறந்த முறையில் கடைப்பிடித்து வாழ்வோம். எல்லா காலங்களிலும் மூவரை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். நாம், பிறர், இறைவன் அதுபோன்றே தவக்காலத்தில் பாரம்பரியமாகத் திருஅவை வலியுறுத்தும் காரியங்களும் மூன்றுதான். தவம், தானம், செபம். எனவே தவக்காலத்தில் எதனை விட்டு விடுவது என்று யோசிக்காமல் எந்த அன்புச் செயலைச் செய்யலாம் என்று சிந்திப்போம், புனிதத்தில் வாழ்வோம், வளர்வோம்.

## புனித யோசேப்பு: நம் குடும்ப வாழ்வுக்கு வழிகாட்டி

திரு. டே. ஆக்னல் ஜோஸ்

அன்பார்ந்தவர்களே, நமது கத்தோலிக்கத் திருஅவை மார்ச் 19ஆம் நாளன்று கன்னி மரியாவின் கணவரான புனித யோசேப்பு பெருவிழாவைக் கொண்டாடி மகிழ்கின்றது. விவிலியத்தில் ஒரு வார்த்தைக்கூட பேசாமல் மாபெரும் செயல்களைச் செய்தவர் புனித யோசேப்பு. கடவுளின் திட்டத்தில் யோசேப்பு மிகுந்த முக்கியத்துவம் பெற்றவர் என்பது இறையியல் அறிஞர்களின் ஒப்புதல். இத்தகைய நம்பிக்கையின் காரணமாகவே, திருஅவையும் அவருக்குப் பெருவிழா எடுத்து சிறப்பிக்கின்றது.

புனித யோசேப்பின் வாழ்க்கை நிகழ்வுகளைக் காட்சியாகக் கண்ட வணக்கத்திற்குரிய மரியா தெ அக்ரெதா என்ற அருட்சகோதரி (1602-1665), புனித யோசேப்பு தாயின் வயிற்றில் ஏழு மாதக் கருவாக இருந்தபோதே தூய ஆவியாரின் அருட்பொழிவைப் பெற்றார் என்று கூறுகிறார். குழந்தைப் பருவத்தில் இருந்தே யோசேப்பு புனிதமானவராக வாழ்ந்து வந்தார் என்றும், சமாதானம் ஏற்படுத்துவதில் ஆர்வம் கொண்டவராக விளங்கினார் என்றும் மரியா தெ அக்ரெதா விவரிக்கிறார். புனித யோசேப்பு சிறு வயது முதலே தாழ்ச்சியும் கீழ்ப்படிதலும் கொண்டவராக இருந்தார். அவரது வாழ்வு செபத்துடன் இணைந்ததாக, கடவுளுக்கு மிகவும் உகந்ததாக இருந்தது. பக்தியிலும் இறையச்சத்திலும் அவர் சிறந்து விளங்கினார். பன்னிரண்டாம்

வயதில் யோசேப்பு கற்பின் வாக்குறுதியை ஏற்று கடவுளுக்குத் தம்மை அர்ப்பணித்தார். மனிதர்கள் முன்னிலையிலும் அவர் குற்றம் காணமுடியாத தூய வாழ்வு வாழ்ந்து வந்தார்.

புனித யோசேப்பின் சிறு வயது வாழ்க்கை, நம் குடும்பத்தில் உள்ள சிறுவர்களுக்கு சிறந்த முன்மாதிரியாக இருக்கிறது. சிறுவர்கள் இறைப்பற்றிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க புனித யோசேப்பு வழிகாட்டியாக இருக்கிறார். அவரைப் பின்பற்றி, கடவுளின் திருவுளத்தை அறிந்து செயல்பட செபிக்குமாறு குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் வழிகாட்ட வேண்டும். குழந்தைகள் இறையச்சம் கொண்டு, பக்தியில் வளர அவர்களுக்கு உதவ வேண்டும். புனித யோசேப்பைப் பற்றி நற்செய்தி நூல்கள் மூன்று விவரங்களைத் தருகின்றன: அவர் கடவுளுக்கும் திருஅவைக்கும் மதிப்பளித்து நேர்மையாளராக வாழ்ந்தார், கடவுளின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து கன்னி மரியாவுக்குப் பிரமாணிக்கமுள்ள கணவராக நடந்து கொண்டார், கடவுளின் திட்டத்தை ஏற்று இறைமகன் இயேசுவுக்குப் பொறுப்புள்ள தந்தையாகச் செயல்பட்டார். இவ்வாறு திருக்குடும்பத்தின் மாண்புமிகுத் தலைவராகத் திகழ்ந்தார்.

"திருமணத்திற்குப் புறம்பாக கருத்தாங்கும் எந்தப் பெண்ணும் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும்" என்பது அக்கால யூதர்களின் சட்டமாக இருந்தது. இத்தகையச் சூழலில் தமக்கு மண ஒப்பந்தமான கன்னி மரியா கருத்தாங்கி நிற்பது யோசேப்புக்குத் தெரிய வருகிறது. யோசேப்பு சட்டத்தை மதித்த நேர்மையாளர். ஆகவே, மரியாவைத் தமது மனைவியாக ஏற்க அவரது மனம் தயங்குகிறது. அதே நேரத்தில், யூத சமூகத்தால் மரியா கல்லெறிப்பட்டு இறப்பதையும் யோசேப்பு விரும்பவில்லை. யோசேப்பு சட்டத்தை விடவும் மனிதநேயத்தை முன்னிறுத்தியவராய், மரியாவை மறைவாக விலக்கிவிடத் திட்டமிடுகிறார். பக்தி மிகுந்தவரான யோசேப்பு, தமக்கு ஏற்பட்டக் குழப்பத்தைக் கடவுளின் பாதத்தில் அர்ப்பணித்துவிட்டு அமைதியான உறக்கத்தில் ஆழ்கிறார். கனவில் தோன்றிய வானதூதர் வழியாக அவருக்குத் தெளிவு கிடைக்கிறது. "கன்னி மரியா கருவுற்றிருப்பதற்குத் தூய ஆவியே காரணம்" என்பதை அறிந்ததும், அவரைத் தமது மனைவியாக யோசேப்பு ஏற்றுக் கொள்கிறார்.

புனித யோசேப்பைப் பின்பற்றி நாமும் சட்டத்தைப் புறக்கணித்து மனிதநேயத்துக்கு முதலிடம் கொடுத்தால், புதிய உறவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும். நமது வாழ்விலும் பல்வேறு நெருக்கடியான குழப்பமானச் சூழல்கள் வருகின்றன. அத்தகையத் தருணங்களில், நமது கவலைகளைக் கடவுளின் பாதத்தில் வைத்துவிட்டு ஓய்வெடுக்கப் பழக வேண்டும். அப்பொழுது, நாம் கடவுளின் திருவுளத்தை அறிந்து சரியான முடிவெடுக்க கடவுள் நமக்கு உதவி செய்வார் என்பதை புனித யோசேப்பு நமக்குக் கற்றுத் தருகிறார். நேர்மையாளரான புனித யோசேப்பு,

கன்னி மரியாவை மனைவியாக ஏற்றதும் தமது வேலை முடிந்தது என்று அமைதியாக இருந்துவிடவில்லை. கணவருக்குரியப் பொறுப்புகளை உணர்ந்து, கருத்தாங்கி இருந்த கன்னி மரியாவுக்குத் தேவையான அனைத்து பணிவிடைகளும் செய்தார். கடவுளின் திட்டம் நிறைவேறுமாறு, கன்னி மரியாவைக் கோவேறு கழுதையின்மேல் ஏற்றிக்கொண்டு யோசேப்பு நாசரேத்தில் இருந்து பெத்லகேமுக்கு நடந்தே சென்றார். இறைமகனைக் கருத்தாங்கியிருந்த மரியா தங்குவதற்குப் பெத்லகேமில் விடுதி எதுவும் கிடைக்காத நிலையில், ஒரு மாட்டுத் தொழுவத்தை வசதியான தங்குமிடமாக மாற்றிக் கொடுத்தவர் யோசேப்பு. கன்னி மரியாவுக்கு முன்பாகவே, தந்தை என்ற முறையில் குழந்தை இயேசுவைக் கரங்களில் ஏந்தும் பேற்றினை புனித யோசேப்பு பெற்றார். கடவுளின் திட்டத்தை நிறைவேற்றியதற்குக் கிடைத்தப் பரிசு அது.

மனிதராகத் தோன்றிய இறைமகனுக்கு "இயேசு" என்று பெயரிட்ட வேளையில், திருச்சட்டத்தின்படி அவரது தந்தையானார் யோசேப்பு. குழந்தை இயேசுவைக் கரங்களில் ஏந்திக்கொண்டு எருசலேம் கோவிலில் தூய்மைச்சடங்கை நிறைவேற்றிய வேளையில், கன்னி மரியாவுக்குப் பொருத்தமானத்துணைவராகயோசேப்புதெரிகிறார்.குழந்தைஇயேசுவைக் கொல்ல ஏரோது தேடிய வேளையில், மரியாவையும் இயேசுவையும் அழைத்துக்கொண்டு எகிப்தில் அடைக்கலம் புகுந்த யோசேப்பில் பொறுப்புள்ள கணவரைக் காண்கிறோம். ஒரு குடும்பத் தலைவர் எப்படி தமது மனைவியையும் குழந்தைகளையும் பாதுகாக்க வேண்டும் என்ற பொறுப்புணர்வை புனித யோசேப்பிடமிருந்து நாம் கற்க வேண்டும். தமது வாரிசை மரியா வயிற்றில் சுமக்கவில்லை என்றாலும், கன்னிமரியா மீது புனித யோசேப்பு காட்டிய அன்பும் அக்கறையும் நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன. மரியாவும் யோசேப்பின் சொல் கேட்டு அவருக்கு உகந்த குடும்பத் தலைவியாக இருந்தார் என்பது உண்மை. ஆனால் மரியாவின் மகனான இயேசுவைக் காப்பாற்ற யோசேப்பு மேற்கொண்ட முயற்சிகள், அவரது பெருந்தன்மையையும் இறைத்திட்டத்திற்குக் கீழ்ப்படியும் மனதையும் காட்டுகின்றன.

இறைமகன் இயேசுவின் இவ்வுலகத் தந்தை என்ற முறையில், இயேசு ஞானத்திலும் அறிவிலும் வளர யோசேப்பு துணையாக இருந்தார். பன்னிரு வயதில் எருசலேம் கோவிலில் தங்கிவிட்ட இயேசு, மறைநூல் அறிஞர்களையும் வியக்கச் செய்யும் அளவுக்குப் பேசியதில் யோசேப்பின் பங்கும் இருந்தது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இயேசுவைக் காணாமல் பதறித் துடித்த கன்னி மரியாவுக்கு உறுதுணையாக, அவரைத் தேடியலைந்த புனித யோசேப்பில் பொறுப்புள்ள தந்தையைக் காண்கிறோம். "நம் ஆண்டவரைத் தூக்கிச் சுமக்கும் அருளையும் பெரும் பேற்றையும் யோசேப்பு பெற்றிருந்தார். அடிக்கடி அவரது ஆசிபெற்ற கரங்களில் இருப்பதிலேயே நம் ஆண்டவர் மிகுந்த இன்பம் கொண்டார். மனிதராகத்

தோன்றியத் தம் ஒரே மகன் இயேசு கிறிஸ்துவுக்கு கல்வி கற்பிக்க, கடவுள் தேர்ந்தெடுத்த யோசேப்பு எவ்வளவு பாராட்டுக்குரியவர்" என்று புனித பிரான்சிஸ் தெ சேல்ஸ் வியந்து போற்றுகிறார்.

"இயேசு அவர்களுடன் சென்று நாசரேத்தை அடைந்து, அவர்களுக்குப் பணிந்து நடந்தார். அவர் ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்" (லூக் 2:51,52) என்று நற்செய்தியாளர் கூறுவதில் ஆழ்ந்த பொருள் உள்ளது. "இவர் தச்சருடைய மகன் அல்லவா?" (மத் 13:55), "இவர் தச்சர் அல்லவா" (மாற் 6:3) என்னும் கூற்றுகள், இயேசுவின் வாழ்விலும் நாசரேத்திலும் யோசேப்பு ஏற்படுத்திய தாக்கத்தைப் பறைசாற்றுகின்றன. இவ்வாறு ஒரு பொறுப்புள்ள தந்தையாக புனித யோசேப்பு செயல்பட்டதைக் காண்கிறோம். கடவுளின் திருவுளத்தை அறிந்து நடக்கும் குழந்தை உள்ளம் கொண்டவராகவும், பொறுப்புள்ள குடும்பத் தலைவராகவும், அன்பு நிறைந்த தந்தையாகவும் செயல்படுவது எப்படி என்பதற்கு புனித யோசேப்பு சிறந்த வழிகாட்டியாகத் திகழ்கிறார். குடும்பங்களின் பாதுகாவலரான அவர், நமது குடும்பங்கள் கடவுளுக்கு உகந்தவையாக வாழ உதவுமாறு மன்றாடுவோம். புனித யோசேப்பின் முன்மாதிரியைப் பின்பற்றி, நமது குடும்பங்களையும் திருக்குடும்பங்களாக மாற்ற உறுதியேற்போம்.

## புனித பெர்பெத்துவா, பெலிசித்தா வாழ்வு தரும் பாடம்

திரு. ஜான் சுரேஷ்

புனித பெர்பெத்துவா மற்றும் பெலிசித்தா கருவுற்றிருக்கும் பெண்களின் பாதுகாவலர்கள். "விசுவாசத்தில் ஊன்றி நில்லுங்கள், ஒருவரையொருவர் அன்பு செய்யுங்கள்" என்று இறப்பதற்கு முன்பாகத் தமது கடைசி வார்த்தையை அனைவரிடமும் கூறியவர் பெர்பெத்துவா. 203ம் ஆண்டு கிறிஸ்தவர்களைக் கொன்றழித்த காலத்தில் பெர்பெத்துவா கிறிஸ்தவராக மனமாற முடிவு செய்தார். ஏற்கெனவே டினோக்ரேடஸ் என்னும் இவரின் சகோதரனும் இந்த மறை காலத்தில் இறந்த பிறகு மற்ற சகோதரனும் பெர்பெத்துவாவைப் பின்பற்றினான். இவருடைய தந்தை எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தார். ஏனென்றால் 22 வயதான பெர்பெத்துவாவிற்கு அப்போதுதான் குழந்தைப் பிறந்திருந்தது. அருகிலிருந்த பானையைத் தன் தந்தையிடம் சுட்டிக்காட்டிய பெர்பெத்துவா இதைப் பானை என்பதை தவிர வேறு எப்படியேனும் அழைக்க முடியுமா என்று கேட்டார். முடியாது என்று தந்தை சொன்னதும் "நானும் கிறிஸ்தவர் என்பதைத் தவிர வேறு எதனாலும் அழைக்கப்பட விரும்பவில்லை" என்றார். தந்தை கை நீட்டி அடித்தார். தந்தையிடமிருந்து தப்பிச் சென்ற பெர்பெத்துவா திருமுழுக்கு பெறுபவர்களுக்கான புகுமுக இல்லத்தில் தன்னையே தயார் செய்தார்.

திருமுழுக்குப் பெறுவதற்குத் தம்மையே தயார் செய்து கொண்டிருந்த பெர்பெத்துவா ரெவாகேட்டஸ், சதுர்னியஸ், செதுந்தலுஸ் மற்றும் பெலிசித்தா ஆகியோரை ஆட்சியாளர்கள் கைது செய்தார்கள். ஐந்து பேருக்கும் மறைக்கல்வி போதித்த சத்துருஸ் இவர்களுக்கு முன்னதாகவே சிறையில் அடைக்கப்பட்டார். சிறை முழுவதும் புது கிறிஸ்தவர்கள் அடைக்கப்பட்டு இருந்தார்கள். சிறையில் கூட நெருக்கடி மற்றும் இருட்டாக இருந்தது. இதுவரை இப்படியொரு இருட்டை தன் வாழ்வில் பெர்பெத்துவா கண்டதில்லை. சிறைக்கு வந்த இரண்டு திருத்தொண்டர்கள் காவலர்களுக்குப் பணம் கொடுத்து கைதிகள் அனைவரும் கொஞ்சம் இடவசதியோடு இருக்க ஏற்பாடு செய்தார்கள். பால் கொடுப்பதற்காகக் குழந்தையைச் சிறைக்குக் கொண்டு வருவதற்கும் அனுமதி பெற்றுத் தந்தார்கள். பிறகு குழந்தையைத் தன்னுடனே வைத்துக்கொள்ள அனுமதி பெற்ற பெர்பெத்துவா "குழந்தையைப் பார்த்ததும் எனது சிறை எனக்கு அரண்மனை போலானது" என்று குறிப்பிட்டார். சிறைக்கு வந்த தந்தையின் காலைக் கட்டிக்கொண்டு அதே தந்தையிடம் "எனது சக்தியினால் அல்ல, இறைவனின் அருளாலே நான் இருக்கிறேன்" என்றார்.

விசாரணையின்போது தந்தையின் வேண்டுகோளினால் நீதிபதி பரிந்துபேசி மனதை மாற்றி கிறிஸ்தவ மறையைப் புறக்கணிக்குமாறு கேட்டார். மறுப்பே பதிலாக வந்ததால் பெர்பெத்துவாவை விலங்குகளுக்கு உணவாக்க நீதிபதி தீர்ப்பளித்தார். தந்தை குழந்தையை வலுக்கட்டாயமாகப் பரித்துச் சென்றார். "பால் கொடுக்காததால் மார்பில் பால்கட்டி எந்த துன்பமும் வராமல் இறைவன் என்னை காத்தார்" என்றார் பெர்பெத்துவா. சிறையில் செபித்தபோது ஆண்டவருடன் பேசினார், ஏற்கெனவே இறந்த தனது தம்பியைப் பார்க்க ஆசை தெரிவித்து தம்பியைப் பார்த்தார். அவன் மோட்சத்தில் இல்லாததைக் கண்டு அவனுக்காகச் செபித்தார். அடுத்தடுத்த காட்சியின்போது அவர் மோட்சத்தில் இருப்பதைக் கண்டு மகிழ்ந்தார்.

**பெலிசித்தா:** பெலிசித்தா எட்டு மாத கர்ப்பிணியாக இருந்தார். வயிற்றிலிருக்கும் குழந்தையுடன் கொல்லக் கூடாது என்று சட்டம் இருந்தது. சட்டங்களைக் கடைப்பிடிக்காத அதிகாரிகளையும் தம் குழந்தையையும் நினைத்து பெலிசித்தா கலங்கினார். பிள்ளையை பெற்றெடுக்காமல் இறந்து விடுவோமோ என்று கவலைப்பட்டார் நாட்கள் ஆயின. பிரசவ வலியால் துடித்தார் "இதற்கே இப்படி அழுகிறாயே, விலங்குகள் உன்னைக் கடித்துக் குதறும் அப்போது என்ன செய்வாய்?" என்று அங்கு நின்றுக்கொண்டிருந்த காவலர் கேட்டதற்கு "இப்போது நான் தனியாகத் துன்பப்படுகிறேன் ஆனால் அங்கே என்னோடு இன்னொருவரும் துன்பப்படுவார். ஏனென்றால் நான் அவருக்காகவே துன்பப்படுகிறேன்" என்றார், பெலிசித்தாவுக்குப் பெண் குழந்தைப் பிறந்தது. அதனை கார்த்தேஜில் உள்ள ஒரு கிறிஸ்தவ பெண் எடுத்துச் சென்று வளர்த்தார்.

எல்லோரும் அரங்கத்திற்குள் இழுத்துச் செல்லப்பட்டார்கள். அரங்கம் முழுவதும் மக்கள் வெள்ளம். கிறிஸ்தவர்களின் இரத்த வாடைக்காக ஆரவாரத்துடன் காத்துக் கிடந்தார்கள். பட்டினிப்போட்டு வளர்க்கப்படும் விலங்குகள் திறக்கப்பட்டன, ஓடிவந்த விலங்குகள் கிறிஸ்தவர்களின் உடல்களைக் கிழித்துத் தின்றன. அவைகளின் பசி அடங்கியது, கிறிஸ்தவர்களின் நம்பிக்கை அடங்கவில்லை, எழுந்து ஒலி வீசியது. ஆரம்பக் காலங்களில் பெர்பெத்துவா மற்றும் பெலிசித்தியின் மறைசாட்சியம் வழிபாடுகளில் முக்கிய இடம் பெற்றது.

## திருச்சபைச் செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் ச.ச.,

### பணியாற்றத் தேவையானவை வறுமை, பணிவு, கனிவு

மக்களை மனம் மாற்றவும், அவர்களைக் குணமாக்கவும் செல்லும் சீடர்கள் வறுமை, பணிவு, கனிவு ஆகிய பண்புகளை அணிந்துச் செல்ல வேண்டும் என்று இயேசு விரும்புகிறார் என திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

### மே மாதம் 29ம் தேதி புனிதத் திருத்தந்தை 6ம் பவுல் திருநாள்

புனிதத் திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்கள், 1920ம் ஆண்டு மே மாதம் 29ம் தேதி அருள் பணியாளராகத் திருப்பொழிவு பெற்றதால் அந்நாளை அவரது திருநாளாக அறிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். 2018ம் ஆண்டு அக்டோபர் 14ம் தேதி புனிதராக உயர்த்தப்பட்ட திருத்தந்தை 6ம் பவுல் அவர்களின் திருநாள் மே மாதம் 29ம் நாள் கொண்டாடப்பட வேண்டும் என்று திருத்தந்தை அவர்கள் வழங்கிய அறிக்கை 2019 பிப்ரவரி 6, புதனன்று வெளியிடப்பட்டது.

### 800 ஆண்டுகளுக்குப் பின்னர் அமைதிக்குப் புதிய அர்ப்பணம்

பிப்ரவரி 04 அசிசி நகர் புனித பிரான்சிசின் பெயரைத் தாங்கியிருக்கும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் அமைதிக்காகத் தாகம் கொள்ளும் விசுவாசியாக தன்னை முஸ்லீம் சகோதரர்களிடம் வெளிப்படுத்தினார். உரையாடலின் முக்கியத்துவம் கடவுளின் பெயரால் ஆற்றப்படும் பயங்கரவாதம் மற்றும் அனைத்து விதமான வன்முறைகளைப் புறக்கணித்தல், பெண்களின் நிலையை மேம்படுத்துவதற்கு ஆதரவு, இயற்கையை மதித்தல் உட்பட பல கொள்கைகளுக்கு இந்த ஆவணத்தில் இவ்விரு தலைவர்களுக்கும் இசைவு தெரிவித்துள்ளனர்.

### இந்திய திருஅவை பணிக் குழுக்களின் தலைவர்கள் தேர்வு

சுற்றுச்சூழலுக்கென புதிதாக ஒரு பணிக்குழுவை இந்திய ஆயர் பேரவை உருவாக்கியுள்ளது. தமிழகத்தின் மாமல்லபுரத்தில் 2019 சனவரி மாதம் 7ம் தேதி முதல் 14ம் தேதி வரை இடம் பெற்ற இந்திய இலத்தீன்

வழிபாட்டுமுறை ஆயர்கள் பேரவையின் ஆண்டுக்கூட்டம், இரு புதிய பணிக்குழுக்களை உருவாக்கியுள்ளதோடு பல்வேறு பணிக்குழுக்களுக்கு புதிய தலைவர்களையும் தேர்வுச் செய்துள்ளது. கோவா மற்றும் டாமன் பேராயர் பிலிப்பு நேரி பெராரோ அவர்களை தலைவராகவும், சென்னை மயிலை பேராயர், ஜார்ஜ் ஆண்டனிசாமி அவர்களை, மீண்டும் துணைத் தலைவராகவும், டெல்லி பேராயர் அனில் ஜோசப் தாமஸ் கூட்டோ அவர்களை, மீண்டும் பொதுச்செயலராகவும் தேர்வுச் செய்துள்ள இந்திய இலத்தீன் வழிபாட்டுமுறை ஆயர் பேரவை சுற்றுச்சூழலை மையப்படுத்திய ஒரு பணிக்குழுவையும், சிறிய கிறிஸ்தவக் குழுமங்களை மையப்படுத்திய ஒரு பணிக்குழுவையும், புதிதாக உருவாக்கியுள்ளது.

**தூத்துக்குடி மறைமாவட்டத்தின் புதிய ஆயர் நியமனம்**

தூத்துக்குடி மறைமாவட்டத்தின் ஆயராகப் பணியாற்றி வந்த ஆயர் யுவான் அம்புரோஸ் அவர்கள், தன் பணியிலிருந்து ஓய்வு பெற விரும்பி, அனுப்பிய விண்ணப்பத்தை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஏற்றுக்கொண்டு இம்மறைமாவட்டத்தின் புதிய ஆயராக, அருள்பணி ஸ்டீபன் ஆன்டனி பிள்ளை அவர்களை நியமித்துள்ளார். 1952ம் ஆண்டு ஜூன் 22ம் தேதி கோட்டாறு மறைமாவட்டத்தின் கீழமணக்குடி என்ற ஊரில் பிறந்த ஸ்டீபன் ஆன்டனி பிள்ளை அவர்கள், 1979ம் ஆண்டு மே 7ம் தேதி வேலூர் மறைமாவட்டத்தின் அருள்பணியாளராக திருநிலைப்படுத்தப்பட்டார். 1986ம் ஆண்டு முதல் 6 ஆண்டுகள் கரீபியன் பகுதியில், குவாதலூப் தீவில் மறைப்பணியாளராக உழைத்தார். பங்கு அருள்பணியாளராகவும், இறையியல் பேராசிரியராகவும், பணியாற்றிவந்த அருள்பணி ஆன்டனி பிள்ளை அவர்கள், வேலூர் மறைமாவட்ட பேராலயத்தின் பங்கு அருள்பணியாளராகவும், அம்மறைமாவட்டத்தின் முதன்மை அருள்பணியாளராகவும் பணியாற்றியுள்ளார்.

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை மார்ச் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று

பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

## சுடர் வாசகர் போட்டி - 56 சரியான விடைகள்

1. புனித அருளானந்தர்
2. புனித கொன்சாலோ கார்சியா
3. எசாயா
4. புனித சிரில்
5. புனித லூயிஸ் வெர்சீலியா
6. தடியத் தேவனின் கடைசி மனைவி
7. 98வது வயதில் இறந்தார்
8. திருமுழுக்கு
9. ஓரியூரில், தலை வெட்டப்பட்டு
10. 2004ம் ஆண்டு ஏப்ரல் 25ம் நாள் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர்
11. லூர்து நகர் மொசபேயல் குகையில் பெர்னதெதிடம் கூறினார்
12. அந்தியோக்கு நகர் இஞ்ஞாசியார்
13. வியாகுல அன்னையின் புனித கபிரியேல்
14. 34 வயது வரை வாழ்ந்தார்
15. பெர்னதெத்

**குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்**

J. Nava Irudayamary, Kolappalur

Sr. Ophiliya, Kovai

A. Irudaya Mary, Tiruppur

## சுடர் வாசகர் போட்டி - 57

1. எட்டு மாத குழந்தையை வயிற்றில் தாங்கி சிறைச் சென்ற புனிதர் யார்?
2. நன்மை செய்யும் சகோதரர்கள் மருத்துவ மனைகளை உருவாக்கியவர் யார்?
3. மரியாளின் கணவர் புனித யோசேப்பு யாருடைய பாதுகாவலர்?
4. எந்த ஆண்டு புனித பெர்பெத்துவா கிறிஸ்தவராக மனம்மாற முடிவு செய்தார்?
5. அருட்பணி. ஸ்டீபன் ஆன்டனி பிள்ளை எத்தனை ஆண்டுகள் குவாதலூப் தீவில் மறைப்பணியாளராக பணியாற்றினார்?
6. மனமாற்றத்திற்கு எந்த மூன்று செயல்கள் முக்கியமானவை என்று ஆசிரியர் கூறுகிறார்?
7. கருவுற்றிருக்கும் தாய்மார்களின் பாதுகாவலி யார்?
8. புனித கசிமீர் எந்த நாட்டு இளவரசர்?
9. எந்த நாளை புனிதத் திருத்தந்தை ஆறாம் பவுல் திருநாளாக திருஅவை கொண்டாடுகிறது?
10. திருமுழுக்கு பெற இருந்த நிலையில் பெர்பெத்துவா ரெவாகேட்டஸ் உடன் கைது செய்யப்பட்டவர்கள் யார் யார்?
11. மனித குலத்தின் மீட்பின் கதவு திறப்பதற்கு காரணமாயிருந்தது எது?
12. புனித சிரில் எந்த தப்பறைக்கு எதிராக போராடினார்?
13. நோயாளிகளை தன் தோளில் சுமந்து சென்று மருத்துவம் கொடுத்தவர் யார்?
14. புனித கசிமீர் எந்த ஆண்டு எந்த நோயால் பாதிக்கப்பட்டு இறந்தார்?
15. யாருடைய இறப்பிற்கு பின் எருசலேம் நகர் புனித சிரில் ஆயராக நியமிக்கப்பட்டார்?

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

புனித பிரான்சிஸ்
தவக்காலம் 5ஆம் ஞாயிறு
புனித ஸ்தனிஸ்லாஸ்
புனித முதலாம் மார்ட்டின்
குருத்து ஞாயிறு
ஆண்டவரின் இரவு உணவுத் திருப்பலி
திருப்பாடுகளின் புனித வெள்ளி
பாஸ்கா திருவிழிப்பு புனித சனி
உயிர்ப்பு பெருவிழா
புனித மாற்கு
உயிர்ப்புக் காலம் இரண்டாம் ஞாயிறு
புனித ஐந்தாம் பயஸ்

### பகுதி 2: விசுவாசத்தில் வளர...

நம் வாழ்வில் இயேசுவின் உயிர்ப்பு
புனித ஐந்தாம் பயஸ் வாழ்வு தரும் பாடம்
புனித மாற்கு கண்ட இயேசுவின் சுவடுகள்
திருச்சபை செய்திகள்

**தீபகச் சுடர்**

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்:.................................
முகவரி:...............................
.......................................
.......................................
.......................................

## மார்ச் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | வெ | புனித டேவிட் | சீரா 6: 5-17 | மாற்கு 10: 1-12 |
| 2 | ச | புனித ரிச்சர்டு | சீரா 17: 1-15 | மாற்கு 10: 13-16 |
| 3 | ஞா | **பொதுக்காலம் 8ம் ஞாயிறு** | I. எரே 27: 4-7<br>II. 1கொரி 15: 54-58 | லூக் 6: 39-45 |
| 4 | தி | புனித கசிமீர் | சீரா 17: 20-29 | மாற்கு 10: 17-27 |
| 5 | செ | புனித சிலுவையின் புனித யோசேப்பு | சீரா 35: 1-12 | மாற்கு 10: 28-31 |
| 6 | பு | **திருநீற்று புதன்** | I. யோவே 2: 12-18<br>II. 2கொரி 5:20-6:2 | மத் 6: 1-6,16-18 |
| 7 | வி | புனிதையர் பெர்பெத்துவா, பெலிசிட்டி | இச 30: 15-20 | லூக். 9: 22-25 |
| 8 | வெ | இறைவனின் புனித ஜான் | எசா 58: 1-9 | மத் 9: 14-15 |
| 9 | ச | புனித பிரான்சிஸ் | எசா 58: 9-14 | லூக் 5: 27-32 |
| 10 | ஞா | **தவக்காலம் முதல் ஞாயிறு** | I. இச. 26: 4-10<br>II. உரோ 10: 8-13 | லூக் 4: 1-13 |
| 11 | தி | புனித யுலோஜியுஸ் | லேவி 19: 1-2, 11-18 | மத் 25: 31-46 |
| 12 | செ | புனித தேயூனேபஸ் | எசா 55: 10-11 | மத் 6: 7-15 |
| 13 | பு | புனித யுப்ரேசியா | யோனா 3: 1-10 | லூக் 11: 29-32 |
| 14 | வி | புனித மெட்டில்டா | எஸ் 4:17 | மத் 7: 7-12 |
| 15 | வெ | புனித லூயிஸ மரிலாக் | எசே 28: 21-28 | மத் 5: 20-26 |
| 16 | ச | புனித ஹெர்பர்ட் | இச 16: 16-19 | மத் 5: 43-48 |
| 17 | ஞா | **பொதுக்காலம் இரண்டாம் ஞாயிறு** | I. தொநூ 15: 5-12.17-18<br>II. பிலி 3: 17-4:1 (அ) 3: 20-4:1 | லூக் 9: 28-36 |
| 18 | தி | புனித சிரில் | தானி 9: 4-10 | லூக் 6: 36-38 |
| 19 | செ | **கன்னி மரியாவின் கணவர் புனித யோசேப்பு** | 2சாமு 7: 4-5,12-14,16<br>உரோ 4: 13,16-18,22 | மத் 1: 16,18-21,24<br>(அ) லூக் 2: 41-51 |
| 20 | பு | புனித குத்பெர்ட் | எரே 18: 18-20 | மத் 20: 17-28 |
| 21 | வி | புனித நிக்கோலாஸ் | எரே 17: 5-10 | லூக் 16: 19-31 |
| 22 | வெ | புனித மரிய ஜோச்பா | தொநூ 37: 3-4, 12-13,17-28 | மத் 21: 33-43, 45-46 |
| 23 | ச | புனித மாங்க்ரோவேகோ துரிபியுஸ் | மீக் 7: 14-15,18-20 | லூக் 15: 1-3, 11-32 |
| 24 | ஞா | **பொதுக்காலம் மூன்றாம் ஞாயிறு** | I. விப 3:1-8,13-15<br>II. 1கொரிற 10: 1-6,10-12 | லூக் 13: 1-9 |
| 25 | தி | **ஆண்டவருடைய பிறப்பு அறிவிப்பு** | I. எசா 7:10-14, 8-10<br>II. எபி 10: 4-10 | லூக் 1: 26-38 |
| 26 | செ | புனித லுட்ஜர் | தானி 1: 2,11-19 | மத் 18: 21-35 |
| 27 | பு | புனித எகிப்தின் ஜான் | இச 4: 1.5-9 | மத் 5: 17-19 |
| 28 | வி | புனித சிக்துஸ் III | எரே 7: 23-28 | லூக் 11: 14-23 |
| 29 | வெ | புனித ரூபர்ட் | ஓசே 14: 2-10 | மாற்கு 12: 28-34 |
| 30 | ச | புனித ஜான் கிளிமாகஸ் | ஓசே 5: 15-6:1-6 | லூக் 18: 9-14 |
| 31 | ஞா | **தவக்காலம் நான்காம் ஞாயிறு** | யோசு 5:9 | லூக. 15: 1-3, 11-32 |